Registered No. M. 878.

433

# பூர்ணசந்திரோதயம்.

**A Tamil Monthly Journal**

***Devoted to Theosophy, Religion, Science, Art and Civilization***


தொகுதி 5 | 1915ஆு ஏப்ரல்மீ 15உ<br>ராக்ஷஸஆு சித்திரைமீ 3உ | பகுதி 12


அ. ரங்கஸ்வாமி ஐயர், B.A, B.L., F.T.S, பத்திராதிபர்.


வருஷ சந்தா ரூ 2

தனிப்பிரதி அணா 4

மதுரை:

விவேகபாநு அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.


Copy Right Reserved.

## பொருளடக்கம்

## CONTENTS.

பக்கம்.

1. தற்கால நிலைமை—அ. ரங்கஸ்வாமி ஐயர். B.A., B.L., F.T.S. 441
From the Editor—A. Rangaswamy Iyer. B.A., B.L., F.T.S.

2. பிரஹ்மக்ஞானியின் கடமைகள்—வி. ராமசந்திரஐயர், B.A., B.L., F.T.S. 448
Duties of the Theosophist—V. Ramachandra Iyer B.A., B.L., F.T.S.

3. மைத்ரேயர்-இனி அவதரிக்கவேண்டிய மஹாபுருஷர்-C. W. லெட்பீடர் 453
The Coming Christ—C. W. Leadbeater

4. அசோக சாஸனங்கள்—ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர் B. A., B. L., 457
Asoka Sasana—R. S. Narayanaswamy Iyer B. A., B. L.,

5. பரமர் வருந்தருணம்—ஸி. ஜினராஜதாஸர் 463
When He Comes—C. Jinarajadasa

6. டோரா (டென்னிஸன் பிரபு)—பண்டித ம. கோபாலகிருஷ்ண ஐயரவர்கள் 468
Dora (Lord Tennison)-Pandit M Gopalakrishna Iyer

7. சிறுவர்க்குரிய விஷயம்—வஸந்தாநந்தர். 477
Children's Corner—Vasanthananda.

---

***Ready for Sale.***

*The English Translations of:—*

**Thirty Minor Upanishads Rs. 3-8-0**

**Laghu Yoga Vasishta Rs. 2-0-0**

**Professor Bergson & the Hindu Vedanta Rs. 0-1-0**

**without postage.**

The above Upanishads, except one or two have never before been published in a book-form. Please apply to:—

**K. Narayanasamy Iyer Esq.,**

Theosophical Society, Adyar, Madras.

# பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 5 } 1915ஆம் ஏப்ரல்மீ 15உ { பகுதி 12
ராக்ஷஸஆம் சித்திரைமீ 3உ


## தற்கால நிலைமை.

சென்ற (மார்ச்சு) ~~பிப்ரவரிமீ~~ 20, 21, 22உகளில் மாதுஸ்ரீ அன்னிபெஸ
ண்டு அம்மையாரவர்கள் மதுரையில் சில பிரஸங்கங்களைச் செய்த
னர். 20உ மாலை 'ஜனன பூமிக்குரிய கைங்கரியம்' என்ற விஷயத்
தைப் பற்றிய பிரஸங்கம் நடைபெற்றது. அப்பிரஸங்கமானது
ராஜாங்க சீர்திருத்தத்தைப் பற்றியதாயிருந்தது. மதுரை, ராமநா
தபுரம் ஜில்லாக்களின் பலவிடங்களிலிருந்தும் பலர் வந்திருந்தனர்.
அம்மையவர்களின்பிரஸங்கத்தின் முக்கியமான விஷயம்யாதெனில்,
இப்பொழுது நிகழும் யுத்தம் முடிந்தபின் பிரிட்டிஷ் ராஜ்யம
ண்டலத்திலுள்ள பல தேசங்களுக்குள் அன்னியோன்னிய பாவம்
அதிகரித்து, ஆங்கில தேசத்திற்கும் இந்திய தேசத்திற்கும் உள்ள
அன்பும் அநுதாபமும் அவ்விரு தேசத்தார்களும் ஒன்று சேர்ந்து
ஒரே மனதுள்ளவர்களாய் தற்காலத்தில் போர் புரிவதின் மூலமாய்
அபிவிருத்தியடைந்து, ஆங்கிலேய தேசத்தார் இந்தியாவின் நிலைமை
யை எவ்வாறு மேன்மைப்படுத்தலாகும் என்று கேட்பின்; அக்கால
த்தில் இந்தியர்கள் எல்லோரும் ஐக்கியத்துடன் ஒன்று சேர்ந்து
இராஜரீக விஷயத்தில் எச்சீர்திருத்தம் முதன்மையாகக் கேட்கத்

தக்கதோ அதை முன் பின் நன்ருக கவனித்து ஆராய்ந்து பார்த்து ஜனங்களுக்கு நன்மையைக் கொடுக்கத்தக்க விதமாய் விவரமாக ஒழுங்கு படுத்தி பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் முன், 'அது நாம் வேண்டுவது' என்று வற்புறுத்திச் சொன்னல் மட்டும், அது அவர்களால் ஏற்றுக்கொள்ளத்தக்கதென்று சொல்லி,

* * *

அச்சீர்திருத்தம் யாதெனில் இந்திய இராஜாங்கமான துகிரேட் பிரிட்டன் (Great Britain), குடியேறின நாடுகள் (Colonies) முதலியனபோல் பிரஜைகளின்பிரதிநிதிகளுடையஜுத்தாசைபாலும் நடத்தப்படவேண்டியதற்கு இக்காலத்தில் எவ்வாறு ஆரம்பம் செய்யத்தக்கதோ அதையும் எடுத்துச் சொல்லினர். ஐரோப்பிய அமெரிக்காக் கண்டங்களிலுள்ள தேசங்களில் ஜனப்பிரதிநிதி ஆளுகையானது(Democracy)அந்த தேசங்களின் பூர்விக ஸம்பிரதாயங்களை வழுவி வந்திருக்கின்றதென்றும் அவ்விதமாகவே இத்தேசத்தில் அவ்வாளுகை இத்தேசத்தின் பூர்விக சம்பிரதாயங்களைத் தழுவி நிற்கவேண்டுமென்றும், அப்படி நின்ருல் மட்டில் அது வேளுன்றி நன்மையைக் கொடுக்கத்தக்கதென்றும் இந்தியாவில் அது கிராமத்தில் முதலில் கிராம பஞ்சாயத்து மூலமாய் ஆரம்பிக்கப்பட்டு, கிராமத்திற்குரிய பொதுஜனபிரயோஜனகரமானபிரவிர்த்திகளாகியவிவசாயம்,கல்வி,தேக ஆரோக்கியம், கைத்தொழில், வீண்விவகார மின்மை முதலியவைகளை மேல்பார்க்கவேண்டியதென்றும் கிராமபஞ்சாயத்தின் மெம்பர்களை கிராமத்தில் 21 வயதிற்குமேற்பட்டவாஸிகள் எல்லோரும் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும், கிராம பஞ்சாயத்திற்கு மேல் ரிவினியூ பிரிவாகிய பிர்க்கா (Firka) பஞ்சாயத்து மெம்பர்கள் பல கிராம பஞ்சாயத்தார்களுடையவும் பிரதான கிராம வாஸிகளுடையவும் வோட்டுகளால் (votes) தெரிந்தெடுக்கப்படவேண்டுமென்றும், அப்படி தெரிந்தெடுக்கப்படும் பஞ்சாயத்தார்கள் அவர்கள் ஆளுகைக்குரிய பல கிராமங்களின் பொது நன்மைகளைக் கவனிக்கவேண்டுமென்றும், இவ்வித பிர்க்கா (Firka) பஞ்சாயத்தார்களும் முக்கிய (Firka) வாஸிகளும் தாலூகா போர்டு

மெம்பர்களை அவர்களுடைய வோட்டுகளால் நியமுகம் செய்யவேண்டுமென்றும், அவ்விதமாகவே தாலூகா போர்டு மெம்பர்களும் இன்னும் சில முக்கிய தாலூகா வாஸிகளும் டிஸ்டிரிக்ட் போர்டு மெம்பர்களை நியமுகம் செய்ய வேண்டுமென்றும், அவ்விதமாகவே டிஸ்திரிக்ட் போர்டு மெம்பர்களும் ஜில்லாவிலுள்ள முக்கிய வாஸிகளும் ராஜப்பிரதிநிதியின் சபையிலுள்ள மெம்பர்களைத் தெரிந்தெடுக்கவேண்டுமென்றும், இவ்விதமாக ஜனப்பிரதிநிதிகளின் ஆளுகை அமைக்கப்பெறின், கல்வியும் விவேகமும் மென்மேலும் அதிகரிக்க ஆளுகையின் உத்தரவாதமும் அதிகரிக்கக்கூடுமென்றும், கிராமவாஸிகளில் அநேகர் அவர் அவர்களுடைய கிராமங்களின் கஷ்ட நிஷ்டூரங்களை நன்றாயறிந்தவர்களென்றும், அக்கிராம வாஸிகள் ஜில்லா, ராஜதானி, தேசம் முதலியவைகள் சம்பந்தமாயுள்ள விஷயங்களை விவேகத்துடன் சீர்தூக்கி ஆராய்வதில் அவ்வளவு தேர்ச்சியுடையவர்களாய் இருப்பது துர்லபமென்றும், இவ்விதமாகவாவது அல்லது இதுபோன்ற மற்ற எவ்விதமாகவாவது ஜனப்பிரதிநிதி ஆளுகையை (Representative Government) ஸ்தாபித்தால் மற்ற தேசங்களில் இவ்வாளுகையால் ஏற்பட்டிருக்கும் தோஷங்கள் இந்தியாவில் ஏற்படமாட்டாவென்றும் கூறினர்.

***

21வ காலையில் இந்திய வாலிபர்களுக்காக ஸேதுபதி ஹைஸ்கூலில் உபந்நியாஸம் செய்தனர். இந்திய வாலிபர்களுக்கு அவர்களுடைய ஜனன பூமியாகிய இந்தியதேசத்தில் அத்யந்த பக்தியையும் விசுவாசத்தையும் ஏற்படுத்தக்கூடிய கல்வியை வித்தியாசாலைகளில் கற்பித்துக்கொடுக்கவேண்டுமென்றும் ஆங்கில தேசத்தில் புஸ்தக மூலமாகவும் உதாரணங்களாலும் மற்றும் பலமுறைகளாலும் கல்விச்சாலைகளில் கற்கும் மாணுக்கர்களுடைய தேசாபிமானமும் கைங்கர்ய விருப்பமும் உற்சாகப் படுத்தப்படுகின்றதென்றும் இந்தியாவிலும் அவ்விதமாகவே அவ்வழிகளில் உற்சாகம் ஏற்படவேண்டுமென்றும் எடுத்துக் காட்டினர்.

***

21வ மாலையில், இப்பத்திரிகையின் ஸ்தாபகரும் அதிபருமாயிருந்த காலஞ்சென்ற ப. நாராயண ஐயரவர்களுடைய ஞாபகார்த்த

மாக, அவர்களுடைய படமும் அவர்களுடைய காலமும் அவர்களுடைய செய்கையும் வரையப் பெற்ற ஒரு சலவைக்கல்லும் அவருடைய ஊக்கத்திற்கும் சிரத்தைக்கும் ஒரு சாக்ஷி போல் நிற்கும் மதுரை பிரஹ்மக்ஞான சபைக்கட்டிடத்தில் அம்மாளவர்களால் பிரதிஷ்டைசெய்யப்பட்டன. ஐபரவர்கள் வாழ்நாள் முழுவதும் பொது நன்மையை நாடும் பிரவர்த்திகளில் உபயோகப் படுத்தப்பட்டு வந்ததால் அவர்களுக்குப் பின் வருவோர்க்கு அவர்களுடைய ஊக்கமும் சிரத்தையும் ஒரு வெளிச்சம் போல் நிற்க இந்த ஞாபகச் சின்னங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

* * *

மறுபடியும் அன்றுமாலை ‘இந்தியாவிற்கு பிரஹ்மக்ஞானத்தின் அவசியம்’ என்ற விஷயத்தைப்பற்றி ஸேதுபதி ஹைஸ்கூலில் உபந்நியாஸம் செய்தனர். மற்ற தேசங்களைக்காட்டிலும் இந்தியாவில் நடை, உடை, பாவனை முதலியவைகளில் பல வித்தியாஸங்களுடன் கூடின பல மதங்களை அநுஸரிக்கின்ற ஜன ஸமூகங்களும் ஜாதியார்களும் அதிகரித்திருப்பதால், இவர்கள் எல்லோரையும் ஐக்கியப்படுத்தி ஒரு தேசத்தார்களாக தேசாபிமானம் பொருந்தினவர்களாகச் செய்து பாஷை, மதம், ஆசாரம் முதலிய வித்தியாஸங்களினால் வேற்றுமையடையாமல் அவைகளின் தத்துவார்த்தத்தை நன்கு விளக்கி அவைகளின்பொதுவானநன்மைகளைஎடுத்துக் கூறுகின்ற பிரஹ்மக்ஞானம் (Theosophy) என்பதே தற்காலத்தில் இந்தியாவின் லௌகிக அபிவிருத்திக்கும் முக்கிய காரணமாக நிற்கின்றது என்று சொல்லினர்.

* * *

22 உ காலையில் ஜகத்குருவின் அவதாரத்தைக் குறித்து மதுரை பிரஹ்மக்ஞான சபை ஹாலில் உபந்நியாஸம் செய்தார். நாம் உலகத்திற்கு அவருடைய வரவைக் குறித்து எடுத்துக் கூறுவதில் கேட்பார் அங்கீகரிக்கும் விதமாகச் சொல்ல வேண்டும். அப்படி எடுத்துக் கூறுவோரில் சிலருக்கு மட்டும் அவர் வருகையானது நேரில் தெரிந்திருக்கிற விஷயமாயிருப்பினும் மற்றும் பலர் அவர்களுடைய ஸ்வாநுபவத்தின் ஆதாரத்தின் பேரில் பிறருக்கு உரைக்

கக் கூடாததாகையாலும் அவர்களுடைய அநுமானத்தாலும் அவர்களுக்கு பஹிர் முகமாய்த் தோன்றும் அறிகுறிகளாலும் ஜகத்குருவின் வருகையானது மிக ஸம்பாவிதமாயிருக்கிறதென்று எடுத்துக் கூறலாம். அவ்வித முகாந்தரங்களை மூன்று விதமாகப் பிரிக்கலாம். (1) சரித்திரஸம்பந்தமானவை (2) பூகோளஸம்பந்தமானவை (3) மனித ஸ்தூல சரீரவடிவு ஸம்பந்தமானவை. மதஸம்பந்தமான காரணங்களை பரியாலோசனை செய்யுங்கால் உலகசரித்திரத்தில் மத ஸ்தாபகர்கள் தோன்றுமுன் அவர்களது வருகை அவசியமென்று காணப்பட்டு அப்பொழுது உலகத்தில் மானிடர்களுக்குள் ஏற்பட்டுள்ள குணங்கள் அவ்வவதார புருஷர்களால் நிவர்த்திக்கத்தக்கனவாக நிற்கின்றன. கால இயற்கைக்குத் தக்க தத்துவோபதேசம் அவர்களால் கொடுக்கப்படுகின்றது. உலகத்தின் முற்கால சரித்திரத்தில் ஆரியர்களுக்குள் வியாஸர் தோன்றி ஸநாதனதர்மத்தை நிலை நிறுத்தினர். வேதங்களை வேறுபடுத்தி பிரஹ்மசூத்திரங்களை ஏற்படுத்தி புராணங்களைக் கொடுத்திருக்கின்றனர். அது போல் மநுவும் தோன்றி தர்மங்களை ஸ்தாபித்திருக்கின்றனர். பாரஸீகர்களுக்குள் ஸோராஸ்ட்ர் தோன்றி அக்கினி உபாஸனை ரூபமான பாரஸீக மதத்தை ஸ்தாபித்தும் எகிப்து தேசத்தில் ஹெர்மிஸ் அல்லது தாத் என்பவர் தேஜஸ்ஸை ஈசுவர ரூபமாகக்கைக்கொண்ட ஒரு சமயத்தை ஏற்படுத்தியும் கிரேக் தேசத்தில் ஆர்பியஸ் நாதகீதத்தையே ஈசுவர ரூபமாகக்கைக் கொண்ட ஓர் மதத்தை ஏற்படுத்தியும், பரோபகாரத்தை யேபிரதான கைங்கரியமாக உட்கொண்ட கிறிஸ்தவமார்க்கத்தை கிறிஸ்து என்ற சமயாசாரியர் ஏற்படுத்தியும், கடைசியாக முகம்மது என்போர் இஸ்லாம் என்னும் மதத்தை ஸ்தாபித்தும் இவ்விதமாக உலக சரித்திரத்தில் பல காலங்களில் பெரியோர்கள் தோன்றி மனிதர்கள் உஜ்ஜீவிக்கும் பொருட்டு பல வழிகளாகிய மதங்களை ஸ்தாபித்திருப்பின் தற்காலத்திலும் ஜகத்குருவானவர் மனிதர்களுக்குள் அவதரிப்பது அசம்பாவித மாகுமோ?

* * *

தற்காலத்தில் உலகத்தில் செழித்தோங்கி ஆரியர்களென்று பொதுவாய் வழங்கிவரும் 5-வது மனித ஜாதியாருக்கும் 4-வதுவகுப்பினரைச் சேர்ந்த ஜப்பானியர், சீனர், பர்மா தேசத்தார் முதலி

யோருக்கும் ஸ்தூலசரீரத் தோற்றத்தில பல வித்யாஸங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆரியர்களுடைய முகத்தோடு மங்கோலியரின் முகத்தை ஒத்துப் பார்ப்பின், மங்கோலியரின் கண்கள் கோணலாகவும், கன்னத்தின் எலும்புகள் முன்னீட்டி யிருப்பதுமல்லாமல், ஆரிய வகுப்பைச் சேர்ந்தோன் சரீரத்தால் பொறுக்கமுடியாத காயம் அல்லது துன்பத்தை 3-வது வகுப்பைச் சேர்ந்தோன் சகிப்பான்.

***

கடைசியாக ஜகத்குருவின் ஸ்தானத்தை வகித்தவர் கௌதமராகிய புத்தரே. அக்கௌதமர் அப்பதவியை விட்டு மேற்சென்ற பின் உத்தாலகருடைய சிஷ்ராகிய மைத்திரேயரிஷியானவர் அந்த ஸ்தானத்தையடைந்து ஜகத்குருவாயிருக்கின்றனர். உலகத்தில் ஆரிய மனிதனுடைய முகத்தோற்றம் மாறிக்கொண்டு வருகின்றது. அமெரிக்கா கண்டத்தைச் சேர்ந்த ஐக்கிய மாகாணங்களில் குடியேறின பலஜாதியர்களுக்குள் நூதனமான குணநிசயங்களோடு கூடின முகத்தோற்றத்தையுடைய மனிதர்கள் காணப்படுகிறார்கள். ஆரியர்கள் மங்கோலியர்களிலிருந்து எவ்வாறு முகத்தோற்றங்களில் வித்தியாஸப்படுகிறார்களோ அதுபோலவே இப்பொழுது ஐக்கிய மாகாணங்களில் நூதனமாகக் காணப்படுகின்ற மனிதர்கள் ஆரியர்களைக் காட்டிலும் முகலக்ஷணங்களில் வேற்றுமைப்பட்டு பின்காலங்களில் உற்பவிக்கப்போகின்ற 6-வது மானிட ஜாதியர்களுடைய தற்காலத்தில் தோன்றுகிற பிரதிநிதிகள் போல் விளங்குகின்றார்கள். இவ்வித மனிதர்கள் பரந்த முகம், வாய், மூக்கு, முதலியவைகள் பிரதிமைகளது போல அழகாய் அமைக்கப்பட்டும் விசாலமான நெற்றியுடனும் பொருந்தினவர்களாய் பொதுவாகப் பார்க்குமிடத்து சாமர்த்தியமுள்ளவர்போலக் காணப்படுகிறார்கள். இவ்வித மனிதர்கள் மேன்மேலும் அதிகமாகத் தோன்றுகிறார்கள் என்று பிரஹ்மஞானசபையைச் சேராத American Ethnological Bereau என்ற மநுஷ்ய ஜாதிகளைக் குறித்துப் பரிசீலனை செய்யும் சாஸ்திர சபையோரால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இவ்வித நூதன குணங்களுடன் கூடிய சரீர அமைப்பை அடைகின்ற மனிதர்கள் தோன்றினால் ஒரு பெரிய சமயாசிரியர் தோன்றும் காலம் கிட்டுகிறதென்

றே நாம் ஊகிக்கலாம். அவ்வித நூதனமானிடவர்க்கமானது அமெரிக்காக்கண்டத்தில் தோன்றப் போகிறதென்று பிளவாட்ஸ்கி அம்மையாரவர்கள் சொல்லியிருக்கின்றனர். அவ்வித நூதன ஜாதியாருக்குத் தக்க நாகரிகத்தையும் வைதிகக் கொள்கைகளையும் கொடுக்கத் தக்க ஆசாரியர் தோன்றுவதும் சம்பாவிதமே.

* * *

இன்னும் நமது யுக்திக்கு சம்மதமான இதர காரணங்களினால் ஜகத்குரு அவதாரம் செய்யும் தருணம் கிட்டியிருக்கிறதென்று உபந்நியாஸத்தில் எடுத்துக்காட்டினர். அவைகளைக்குறித்து வரும்மாச சஞ்சிகையில் கூறுவோம்.

* * *

அடையாற்றில் நாளிது மீ 3உ முதல் 6வ-வரை தென்இந்திய பிரஹ்மக்ஞான சபை (South Indian Convention) கூடிற்று. சுமார் 150 பிரதிநிதிகள் பலவிடங்களிலிருந்தும் வந்திருந்தனர். ஸெகண்டர்பாத்தில் மகா-ா-ா-ஸ்ரீ அவதானலு அவர்கள் பிரஹ்ம ஸூத்திரங்களைப்பற்றியும் பிரஹ்மக்ஞானசபை இன்ஸ்பெக்டர் மகா-ா-ா-ஸ்ரீ P. R. சுந்தரராஜ ஐயரவர்கள் ஸ்ரீமத் பாகவதபுராணத்தைப்பற்றியும் 3 தினங்களில் முறை முறையே தெலுங்கிலும் தமிழிலும் உபந்நியாசம் செய்தார்கள். வந்த மெம்பர்களில் இந்துஸ்திரீகள் பலர் இருந்தனர். அப்பிரசங்கங்கள் எல்லோருக்கும் பயனுள்ளதாயிருந்தன. சபையும் நன்றாக முடிவுபெற்றது.

அ. ரங்கஸ்வாமி ஐயர்.

---

## நன்மொழி.

---

வயல்களில் களைகள் நிறைந்திருக்குமாறு போல், மனிதர்களுக்குள் ராகத்வேஷங்கள், ஆசாபாசங்கள் நிறைந்திருக்கின்றன. வைராக்கியம் உள்ளவர்களும் (ஆசையற்றவர்களும்) சாந்தர்களும் புண்ய புருஷர்களே.

# பிரஹ்மக் ஞானியின் கடமைகள்.*

இவ்வுலகத்தார் பிரஹ்மக்ஞான உபதேசங்களைப் பெறத் தகுதியுடையராயிருந்த காரணத்தால் தான், நமது பிரஹ்மக்ஞான ஸங்கம் ஆதியில் அமெரிக்காக் கண்டத்தில் ஏற்படும்படி நேர்ந்தது. நமக்கிது சற்று ஆச்சரியமாகத் தோன்றும். இதேமாதிரி பிரஹ்மக் ஞான உபதேசங்களால் நாம் ஸங்கிருதம் பெறவேண்டும் என்பது காரணமில்லாமற் போனல், அச்சங்கத்தில் மெம்பர்களாக நாம் இப்பொழுது சேர்ந்திருக்கவேமாட்டோம். முற்காலங்களில் நம்முடைய முற்பிறப்புகளில் சிற்சில புராணமான மதங்களைக் கைக்கொண்டு, காலக்கிரமத்தில் அம்மதங்களின் வழியாக நாம் அற்பமான எண்ணங்களை உதறி விசாலமான உயர்நோக்கங்களைக் கொண்டோம். இப்பிறப்பில் பிரஹ்மக் ஞானத்தின் வாயிலாக நம்முடைய விசாலமான உயர் நோக்கங்களின் பூர்வ வாஸனை மறுபடியும் புதுப்பிக்கப் பெற்றது என்றே யூகிக்கலாம்.

பிரஹ்மக் ஞானம் என்பது நாம் மனத்தினுலும் வாக்கினுலும் மட்டும் வியவஹரித்துக் கொண்டிருப்பதற்கு ஏற்பட்ட தத்துவதரிசனமல்ல; நாம் செய்துமுடிக்கும் எக் கருமத்திற்கும் ஸர்வ ஆதாரமாயிருக்க வேண்டுவதாயும், எக் கருமத்திற்கும் அழகையும் மேன்மையையும் ஏற்படுத்துவதாயும் உள்ள தத்துவதரிசனமேயாகும். நம்முடைய நித்ய சரியை ஒவ்வொன்றிலும், நம் வாழ்நாள் முழுவதும், எப்போதும் பிரஹ்மக்ஞானம் உட்புகுந்து ஊடுருவி நிற்றல் வேண்டும்.

நம்முடைய பிரவிர்த்திகள் திரிகரணங்களடங்கிய சரீரங்களாலாகின்றன. ஆகையால் நம்முடைய பால்ய பருவத்தில் எவ்விதமான காலதேச வர்த்தமானங்களுக்குட்பட்டு நிகழ்ந் தோமோ, அவற்றிற்குத் தக்கவாறு நாநாவிதமான வகைகளில் நம் திரிகரணங்களின் ஸ்வபாவத்தில் ஸ்திரமான வழக்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. நாம் அனைவரும் இப்போது நம் சரீரங்களின் வழக்கப்படி

---

* நமது சபையின் பெரியார் ஒருவருடைய பிரஸங்கத்தின் ஸாரம்.

யே தொழிற்படுகிறோம். நாம் ஆத்மாவாகையால் நாம் இவ்வாத்மாவின் இயற்கைக்கேற்பப் பிரவிர்த்திப்பதோடும் அவ் வாத்மஸ்வரூபத்தையே வெளிக்காட்டவும் வேண்டும். நாம் உண்மையில் ஆத்மாவாயிருக்க ஆத்மாவின் கோசங்களாகிய சரீரங்களையே நாம் நாம் என்றெண்ணி மயக்கம் பெறுவது மதியீனம். தேஹமானது தேஹியின் கருவி. நாம் கையாள வேண்டுவதற்கே அக்கருவி ஏற்பட்டது.

சரீரம் நம்மையடக்கி யாளும்படி நாம் இடங்கொடுக்கலாகாது. நம்முடைய ஜீவகாலம் முழுமையும், நாம் ஜீவாத்மா என்ற பாவனையுடனேயே நம் நினைப்புக்களையும், நம் கார்யங்களையும் சீர்திருத்தக்கடவோம். பெர்ட்ராம் கைட்லீ என்பவரை யாராவது 'நீர் யார்?' என்று வினவினால் "நான்பிரஹ்மக்ஞானி" என்று முதலில் கூறிவிட்டுப் பிறகு தான் "நான் ஆங்கிலேயன்" என்று சொல்லுவாராம். பிரஹ்மக் ஞானத்தைக் கைக்கொள்ளுபவர்கள் இத்தகைய புதிய சித்தவிர்த்தி யுடையவர்களாகிறார்கள். இதேமாதிரி நாமும் சொல்லக் கூடிய மனமாண்புடையராதல் வேண்டும்.

பிரஹ்மக்ஞானி வெளியுலகத்திற்குச் செய்யவேண்டிய கடமைகள்:—இப்பிறப்பில் அவரவர் செய்யவேண்டிய வெவ்வேறு கர்மத்திற்குத் தக்கவாறு அவரவர்க்கு உரிய சரீரங்கள் ஏற்பட்டுள்ளன. எத்தேசத்தனாயினும், 'எக்குடிப் பிறப்பினும், யாவரேயாயினும்,' ஜீவனுக்காக வேண்டியவேலை ஒன்றேதான். எல்லாவிடத்திலும், பூர்ணமாயுள்ள ஏகவஸ்துவைப் பற்றியே நாம் கோஷிக்கவேண்டும். பிரதி மனுஷ்யனும் ஸமஷ்டியான ஏகவஸ்துவின் ஒரு நுண்ணிய அம்சந்தான் என்பதையும் வியவஹார தசையிலுள்ள நாநாவித வித்யாஸங்களும், முடிவில் ஒன்றேயாகும் என்பதையும் அடிக்கடி ஜநங்களுக்கு வற்புறுத்தவேண்டும்.

அவ்வொற்றுமையை எவ்விதம்போதிப்பது:—பகவான், இயேசு கிறிஸ்து உபதேசம் செய்துகொண்டிருந்த ஒரு சமயத்தில் சிரவணம் செய்துகொண்டிருந்த ஒருவன் அம் மஹானைப் பார்த்து, கடவுளிட்ட பத்து கட்டளைகளின் ஸாரமான கருத்தை எங்களுக்குச் சொல்லவேண்டுமென்றான். அதற்கு அம் மஹான் "உங்களுடைய

ஹிருதய பூர்வமாக, பூர்ணப் பிரேமையுடன் பகவானை பக்திபண்ணுங்கள், உங்களைப்போலவே உங்கள் அயலானையும் அபிமானியுங்கள்" என்றார். இதுதான நமக்கும் ஏற்பட்ட மார்க்கம். இக்கருத்தைத் தான் நாம் எப்பொழுதும் கைக்கொள்ளல் வேண்டும். மற்றவர்களுடன் நாம் ஒற்றுமை பாராட்டுவதில் ஆரம்பத்திலேயே சித்திபெறுவது அஸாத்தியம். தட்டித் தடுமாறித்தான் காலக்கிரமத்தில் நம்முடைய முயற்சி நமக்குக் கைகூடும். சிலவேளையில் சித்திபெறுவோம். மற்றவேளையில் தோல்விபடைவோம். பற்பல நோக்கங்களோடு பற்பல துறைகளில் உழைக்கும் பற்பல ஜனங்களையும் ஒன்றுசேர்ப்பதே பிரஹ்மக்ஞானியின் கடமையாகும். ஒரே சுவரில் பல செங்கல்களை அழுத்தமாக ஒட்டச்செய்யும் சிமெண்டு சுண்ணும்புபோல், பிரஹ்மக்ஞானியானவன் ஒழுகக்கடவன். மனிதர்களின் வெளிவேற்றுமைகளை நினையாது அவற்றில் ஜ்யோதிர்மயமாய், அறிவுமயமாய் விளங்கும் ஆத்மாவென்று மனிதர்களை நீங்கள் போற்றுங்கள். அவ்வாறே மற்றவர்களுக்கும் இத்தத்துவத்தை உணர்த்தக் கடவீர்கள்.

நாம் பிரஹ்மக் ஞானிகள் என்னும் முறைமையில் ஸாமான்யர்களான மற்றையோருக்கே விசேஷமாகக் கடமைப்பட்டிருக்கிறோம். உதாரணமாக மதவிஷயமான மார்க்கத்தில் ஸாமான்யர்களுக்கு நாம் செய்யவேண்டுவது என்ன? ஸகலமதங்களின் மூல தத்துவங்களும் சேர்ந்து ஸர்வமதங்களுக்கும் ஆதாரமான ஸமரஸ மதம் ஒன்றே என்னும் அறிவை அவர்களுக்குப் புகட்டவேண்டும். "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்ற உண்மையையும் அவர்கட்குணர்த்த வேண்டும்.

பொதுஜன நோக்கம், அதாவது சகல ஜனங்களுக்கும் பொதுவான க்ஷேமத்தைக் கோரி நடத்தல் என்ற தர்மம் நம் இந்தியாதேசத்தில் வெகு குறைவாயிருக்கிறது. இது நம் தேசத்தின் பெரிய குறைவுகளிலொன்றாகும். ஆதலால் எவ்விதத்திலும்ஒவ்வொருவரும் அவரவர் அயலார்க்கு நல்லூழியம் எப்போதும் செய்யவேண்டும் என்ற புண்யமான நோக்கத்தை எவ்வகையிலும் நம்மவர்க்குள் பரவச்செய்யவேண்டும், நாம் அயலாருக்கு நல்லூழியம் செய்துதேறத் தேற மஹா ஜனத்திற்கு வேண்டிய பாடுகளைப்பட நாம் பயிற்சி

யடைவோம். சந்தோஷமாயும் சாவகாசமாயும் காலங்கழிப்பதற்கென்றே ஏற்பட்டுள்ள சங்கங்களைக் கூட்டி வைத்தாலுங்கூட நமக்குள் வேற்றுமையை விலக்கி ஒற்றுமையென்ற வுணர்ச்சியை நமக்குள் விருத்திசெய்ய ஏதுவாகும்.

கடைசியாக, உங்களில் ஒவ்வொருவருக்கும் பிரஹ்மக்ஞானம் அநுபவஸித்தமாய் வந்த உணர்ச்சியாயிருத்தல் வேண்டும். அது ஒவ்வொருவருக்கும் அவரவர் தேர்ந்து வழிபட்ட முறைக்கேற்ப வித்யாஸப்படும். பிரஹ்மக் ஞானத்தை எவ்வாறு பிளவாட்ஸ்கி அம்மையாரும் பெஸண்டு அம்மையாரும் அநுஷ்டித்து அநுபவித்தார்களோ அவ்வண்ணமே நீங்கள் ஒவ்வொருவரும் பிரஹ்மக்ஞானத்தின் தத்துவங்களையுணர்ந்து அநுஷ்டித்தல் வேண்டுமென்பதில்லை. உங்கள் வாழ்க்கையில், நீங்கள் நிதர்சனமாயும் அநுபவஸித்தமாயும் கண்டுகொண்ட பிரஹ்மக்ஞானமே உங்களுடையதாகும். இவ்விஷயமாய் நீங்கள் ஒவ்வொருவரும் தனித்துச் சிந்திக்கும் வேளையில் கஷ்டங்களும் வித்தியாஸங்களும் தோன்றிநிற்கும். ஆனால் பிடிவாதமாகச் சோர்வடையாமல் அவற்றை ஆழ்ந்து பரிசீலனை செய்யுங்கால் உங்கள் மனக்கண் தெளிந்து, புத்திகூர்ந்து பிரகாசம் வரவரப்பரவி உலக வாழ்க்கையில் மேன்மேலும் நீங்கள் வலிமையுடனும் புத்திக்கூர்மையுடனும் நடக்கத் திறமையும் தைர்யமும் உங்களுக்குக் கிட்டிவிடும்.

பிரஹ்மக்ஞானி தனக்குத்தானே செய்துகொள்ளவேண்டிய கடமை:—ஜீவர்களுக்குள் பரஸ்பரமாயுள்ள ஸஹோதர பாவத்தை எப்போதும் நீங்கள் அநுஷ்டிப்பதன் மூலம் ஒற்றுமை யுணர்வையநுபவிப்பதிலேயே கருத்துக் கொண்டிருத்தல் வேண்டும். கோபதாப முண்டாகும் வேளையிற்கூட அதற்கேதுவானவனைச் சகோதரனென்றே மதிக்கவேண்டும். அப்பொழுது கொடுமையும் கடுமையும் உங்களைவிட்டு விலகிவிடும். உதாரணமாக தயாநிதிகளான பரமகுரு தேவர்கள் தங்கள் சிஷ்யர்களான நம்மை நாம் குற்றங்குறைகள் எவ்வளவு நிரம்பியவர்களாயினும், எவ்வளவோ கிருபைகூர்ந்து ரக்ஷித்து வருவதைச் சற்று நினைத்துப் பார்ப்போம். அவ்வாறே நீங்களும் உங்கள் இளையோரின்மேல் உங்கள் குருதேவர்களைப் போல அன்பு பாராட்டக் கடவீர்கள். எக்காரியத்திலும் நியாயாதிபதி

யின் இயற்கைத் தன்மையான நடு நிலைமையுடன், பக்ஷபாதமின்றியும் காமக்குரோதமின்றியும், ஒவ்வொன்றையும் பொறுத்துச்செவியில் வாங்கி நிதானித்து நிர்ணயம் செய்யும் வழக்கத்தை அப்யாஸத்திற்குக் கொண்டுவாருங்கள். மற்றொருவனைப்பற்றித் தீயவனென்று தீர்மானிக்கு முன்னர், எவ்வாறு உலோகம் முதலிய தாதுப் பொருள்களைச் சோதித்து வைக்குங்கால் சாஸ்திர முறையாக எக்குறைவுமின்றி நிறை போட்டுப் பார்ப்பீர்களோ, அவ்வாறு நிறுத்துப் பார்த்தல்வேண்டும். நம் உள்ளத்தில் உதயமாகும் நல்லெண்ணங்களும் அநுதாபங்களும் நம் அகத்தின் கண்ணே அடங்கிவிடலாகாது. நம் சுற்றத்திலுள்ள யாவருக்கும் நம்முள்ளத்தின் நன்மையும் அன்பும் வெள்ளமாகப் பரவிச் செல்லவேண்டும். எவர் தேஹம் எம்மாத்திரம் அசுத்தமாயினும் அவர் ஜீவனிடத்து பக்தியே பாராட்டல் வேண்டும்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணனுடைய பார்வைக்கு ஜாதிப் புறம்பானவனொருவனுமில்லை. பிளவாட்ஸ்கி அம்மையார், நிர்வாணம் அல்லது மோக்ஷம் என்ற பதவிக்கு ஏறிச்செல்லும் ஒவ்வொரு பொற்படியையும், முறையாகவெடுத்து உரைத்திருக்கிறார். அப்படிகளில் ஒவ்வொன்றும் ஜீவகோடிகளனைத்தும் அநுபவிக்கவேண்டிய ஏகத்வம் அல்லது ஒற்றுமையின் ஸ்வரூபமாகும். வெளியுலகத்தில் எங்கும் பரவி விளங்காநின்ற ஆத்மாவை நாம் நிதர்சனமாய் எம்மாத்திரம் அநுபவிப்போமோ அம்மாத்திரமே நம் அகக்கண்ணிலும் நிறைந்து நிற்கும் ஆத்மாவை நாம் அநுபவிப்பவர்களாவோம். அகத்திலும் புறத்திலும் ஒன்றாய்க் கலந்து நிற்கும் அறிவுப்பொருள் ஒன்றே. அப்பொருளை நடைபெறும் இவ்வுலகத்தின் கண் நாம் நன்றாய்ப் பார்க்கலாம்.

பிரஹ்மக் ஞானியோவென்றால் அவன் வாயிலாகப் பலரும் தங்கள் பரஸ்பர ஒற்றுமையையும் ஐக்கிய பாவத்தையும் கொண்டாட ஓர் பாத்திரமாகக் கடவன்.

வி. இராமசந்திர ஐயர். B.A., B.L., F.T.S.

ஹைக்கோர்ட் வக்கீல் மதுரை.

# மைத்ரேயர் இனி அவதரிக்கவேண்டிய மஹாபுருஷர்.*

கிறிஸ்து என்றும், மைத்ரேயர் என்றும் பிரஹ்மஜ்ஞானிகளால் கூறப்படும் மஹா புருஷரைப் பற்றியும், முற்காலத்திலும் வருங்காலத்திலும் அவர்க்கேற்பட்டுள்ள தொழிலின் தன்மையைப் பற்றியும் இதிற் கொஞ்சம் வரைவோம். இவ் விஷயமோ அதிவிஸ்தாரமானது. ஆயினும், இப்பெரியாரைப் பற்றிய விவரங்கள் அனைத்தையும் வெளியிடுதல் கூடாதென்றே எமக்கு வரையறை யேற்பட்டிருக்கின்றது. ஆகையால் யாம் வெளியிடக்கூடியதை மட்டும் இங்கு எழுதுவோம். அது உங்களுக்குப் பிரயோஜனகரமாயிருக்கும் என நம்புகிறேன்.

இவ்வுலகமானது, பலர் ஸ்வபாவகதி என்று நினைக்கிறபடி இல்லாமல், ஒரு குறித்த முறையிலேயே அபிவிருத்தியடைந்து வருகிறதென்பதும், அவ்விகாஸமுறைக்குக் காரணஸ்தர்களான ரிஷிகள் அல்லது மஹான்கள் உளரென்பதும், அவர்கள் அவ்விதம் உலகை அரசாளும்வகையில், உலகில் மதங்களை ஸ்தாபனம் செய்து, அவற்றின் மூலமாக மநுஷ்ய கோடிகளை உத்போதம் செய்வதற்கென்றே ஒரு பிரிவினர் உழைக்கின்றன ரென்பதும் முன்னொரு வியாஸத்தில் இப் பத்திரிகையில் கூறப்பட்டுள்ளன. மதஸம்பந்தமான இப் பிரிவினர்க்கு கிறிஸ்து பகவானே தலைமை வகிக்கின்றனர். சில சமயங்களில் அவர் தாமே பூவுலகில் தோன்றி பெரிய மதமொன்றை ஸ்தாபிக்கிறார். மற்றும் பல சமயங்களில் தம்முடைய பிரதம சிஷ்யரை யனுப்பி மதங்களை யேற்படுத்துகிறார். அவர் தம் சக்தியை எக்காலத்தும் ஒரே ரீதியாய் உலகத்திற் பிரவஹிக்கும்படி செய்கிறார். அப் பிரவாஹத்திற்கு எவ்வெவ்விடத்தில் போக்கு ஏற்படுகிறதோ, அவ்வவ்விடத்தில் உலகத்தில் ஒரு மதம் ஏற்படுகின்றது. இவ்வாறு அவ்வொவ்வொரு மதத்திலும், அவருடைய இடைவிடாத சக்தியின் பிரவாஹம் பாய்ந்து, பக்தி பரோபகாரம்,

---

* இது ஸ்ரீமான் C. W. லெட்பீடர் அவர்களால் பிரசித்தம் செய்யப்பட்ட 'அடையாற்றுப் பிரஸங்கங்கள்'' (Adyar Talks) என்னும் புஸ்தகத்தினின்று மொழி பெயர்க்கப்பட்டது.—B. S. ராமசுப்பையர்.

முதலிய நற்குணங்கள் விளைகின்றன. தற்காலத்திய மதங்கள் பலவும், வீணே ஒன்றை மற்றொன்று த்வேஷித்துக் கொண்டிருப்பினும், ஒவ்வொரு மதத்தின் ஸாரத்தை மட்டுமே நம் மஹரிஷியானவர் கிரஹித்துக் கொண்டு எல்லா மதங்களின் மூலமும், அவர் உபகரிப்பார். இதே மாதிரி உலகிலுள்ள எத்தனை ஸங்கங்களாயினும் அவைகளின் நற்பயன் அற்பமாயினும், அவைகளை யெல்லாம் தம்பிரவாஹத்திற்குப் பல வாய்க்கால்களாக ஏற்படுத்திக் கொண்டு அவைகளின் வழியாயெல்லாம் தொழிற் படுகிறார். அந்தோ! அறியாமையாலல்லவோ, ஜநங்கள் வீணன த்வேஷங்கொண்டு நன்மையையொழித்துத் தியன் செய்தலையே நாடுகின்றனர்! அதனால், தம் சக்தியை வீணாய்க் கழிக்கின்றனரே! குப்த சாஸ்திரத்தில் புத்தத்துவம் என்ற அதிகாரணத்தில் ஏராளமான விஷயங்கள் கிறிஸ்துவையும், அவருடைய சிஷ்யர்கள் பலரையும், மதஸம்பந்தமான இலாகாவில் தலைவர்களாகிய அவர்களுக்குள் ஒருவர்க்கும் மற்றவர்க்கும் உள்ள முறைமையையும் பற்றி விஸ்தாரமாக விவரிக்கப்பட்டுள்ளன இப்போது பிரஹ்மக்ஞான ஸபையை நடத்திவரும் ரிஷிகளில் ஒருவர் இம்மத இலாகாவில் நெருங்கிய ஸம்பந்தமுள்ளவராகையால், நம்முடைய சபையிற் சேர்ந்தவர்களுக்கு, இது மஹா முக்கியமான ஓர் விஷயம்.

ஸமீப காலத்தில் ஸம்பவிக்கப்போகும் அவதாரத்தையும் அவ்வவதார புருஷர் உலகில் செய்யப்போகும் திருவவதாரச் செயல்களையும்பற்றி, ஸ்ரீ பெஸண்டு அம்மையாரால் எழுதப்பட்ட "உலகின் மாறுதல்கள்" என்னும் ஆங்கில நூலில் அதி கம்பீரமாய் விவரிக்கப்பட்டிருக்கிறது. அவர் திருவரவு அதி சமீபத்திலேற்படும்.

இஃதெல்லாம் அநேகவாயிர வருஷங்களுக்கு முன்னமேயே தீர்மானிக்கப்பட்டது. இதின் உள்விவரங்கள் முன்னமேயே நுணுக்கமாய் வியவஹரிக்கப்பட்டுத் தயாராயிருக்கின்றன. மற்றும் சில, சமய சந்தர்ப்பங்களுக்குத் தக்கவாறு வியவஹரிக்கப்படும். இம் மஹான்கள் அநேகவாயிர வருஷங்களுக்குப் பிறகு தாம்செய்ய வேண்டிய வேலைகளுக்கு, அநுஸரிக்கவேண்டிய முறைகளையும் நேர்மையாய் முடிக்கவேண்டிய விதத்தையும் இப்போதே திட்டம்

செய்து வைத்துக் கொள்வதானது நம் போலியர்க்கு ஆச்சரியத்தையே தருகின்றது. அவர்கள் அவ்வளவு ஜாக்ரதையுள்ளவர்களாயிருக்கிறார்கள். சில வேளைகளில், ஸூக்ஷ்மலோகங்களில் ஆராய்ச்சி செய்யும் சக்தி வாய்ந்தவர்களுக்குள் சிலராகிய எமக்கு, அம்மஹான்கள் தம் வேலையின் முறையைத் திட்டப்படுத்தி, அதி சிரமமான ஏற்பாடுகளையெல்லாம் விவரித்து வைத்திருக்கும் சித்திரப் படத்தில், வருங்கால விசேஷங்களை விளக்கக்கூடிய ஒரு மூலையைக் கொஞ்சம் பார்க்கும்படி நேரிடுவதுமுண்டு. நாங்கள் இன்னொரு முறையாகவும் அம்மஹாத்மாக்கள் விவஸ்தைப் படுத்தியிருக்கும் ஏற்பாட்டைப் பார்த்திருக்கிறோம். எப்படியெனில், நெடுநாளைக்கு முன் நிகழ்ந்த ஸம்பவங்களெல்லாம் அப்படியே ஆகாசத்தில் சாஸ்நங்களாக்ப் பதிந்திருக்கின்றன வாகையால், மஹரிஷிகள் வெளிப்படுத்தியிருக்கும் தீர்க்க தரிசனங்களெல்லாம் அதிற் காணப்படுகின்றன. அவைகளை ஆராய்ந்து பார்க்கையில் அவை ஒவ்வொன்றும் கிரமமாய்ப் பிரத்யக்ஷமாகவே நிறைவேறி வருகின்றது.

அந்த மஹான்கள் வேலை செய்யவேண்டியவைகள் சித்திரிக்கப்பட்டிருக்கும் படத்தைப் பார்த்துத் தெளிவுறுதலே எனக்கு அதி உத்ஸாஹமானதும் குதூஹலமுமான கார்யம். அப்படத்தின் காந்தியும், அதன் விசாலமான அளவும் நாம் அதைப் பார்க்குமளவில் நம்மைப் பிரமிக்கும்படி செய்கின்றன. ஆயினும், அப்படத்திற் குறிப்பிட்டிருப்பன வெல்லாம் நிச்சயமாய்த் தவறாமல் ஸம்பவிக்கக் கூடியவே என்பதும் தெளிவாய் விளங்குகின்றது. மஹாத்மாக்கள் செய்யும் இத்திருவிளையாட்டில் ஒவ்வொரு மநுஷ்யன் மாத்திரமல்ல. ஒவ்வொரு ஜநஸமூஹமுமே, அததற்குரிய தொழிலை உடையது. அத்தொழிலை முடிப்பதற்குச் சமயம் கொடுக்கப்படுகிறது. ஒருவரையும் அதற்காக அவர்கள் கட்டாயப் படுத்துவதில்லை. அக் காலங்களில் அவரவர்கள் உழைத்தால் சரி, இல்லாவிடில் அந்த ஸ்தானத்திற்கு எவரேனும் வந்தே தீர்கின்றனர். உலக விகாஸத்திற்குக் காரணமான மூல புருஷர்கள், தம்முடைய காரியஸித்தியின் பொருட்டு எக்கருவியையும் உபயோகிப்பார். ஆகையால் அவர்கள் கைங்கர்யத்திற்குக் கருவியாயமைவது நம்முடைய பாக்கி

யமேயாகும். அவர்கள் நிச்சயித்த கார்யம் தவறாது. ஆகையால் அவர்களும் தமக்கேற்ற கருவியையே தேர்ந்தெடுப்பர். எப்படியாயினும் உலகம் அபிவிருத்தியாக வேண்டிய அளவுக்கு ஒரு போதும் குறை யேற்படாது. 1900-வருஷங்களுக்கு முன் டியானுவைச் சேர்ந்த அபொலோனியஸ் என்பார், வெள்ளியம்பலத்தின் ஞானிகளால் அனுப்பப்பட்டனர். அவர் உலகிலவதரித்த காரியம் என்னவென்றால், உலகில் பற்பல விடங்களில் யந்த்ரஸ்தாபநங்களைப் பிரதிஷ்டை செய்து, அதன் மூலமாய் மஹிமைகள் விளங்கும் பல புண்ய க்ஷேத்ரங்களை ஏற்படுத்துதற்கேயாம். அதாவது ஸூக்ஷ்ம சக்திகளின் நுட்பங்களையறிந்த ஞானியர், தாம்ரம், ஸ்வர்ணம் முதலிய லோஹங்களாலான தகடுகளில், தம் நற்சிந்தனைகளின் பயனான சக்தியைப் புகட்டி பூமியில் குறித்த சிற்சில இடங்களில் புதைப்பதுண்டு. பிறகு அதினின்றும் வெளிக்கிளம்பும் அற்புத சக்தியால் அந்தந்த ஸ்தலங்கள் புநிதமாகி, பெரிய வருங்கால ஸம்பவங்களுக்கு உரியனவாகின்றன. அபொலோனியஸ் என்ற ஞானியானவர் அவ்விதம் ஏற்பாடு செய்த ஸ்தலங்களில் சிலஏற்கனவே தீர்மானித்த கார்யங்களுக்கு உபயோகிக்கப்பட்டுள்ளன. சமீபகாலத்தில் ஸம்பவிக்கப் போகும் அவதார காலத்தில் அம்மற்ற ஸ்தலங்கள் உபயோகிக்கப்படும். மைத்ரேயரின் அவதாரமானது 2000-வருஷங்களுக்கு முன்னமேயே விபக்தமாக வியவஹரிக்கப்பட்டு, இந்த ஸ்தூல உலகத்திலும் அதற்கேற்ற ஏற்பாடுகள் அக்காலத்திலேயே ஆரம்பிக்கப் பெற்றன என்பது தெளிவாகின்றது. மஹான்களின் இத்தீர்மானத்தை ஒருதரம் நாம் நேராகவே அறிவோமானால், நம்முலகத்தை ஸூக்ஷ்மமாக அரசாளும் ரிஷிஸங்கத்தில் பூர்ணமாக நம்பிக்கை ஏற்பட்டு ஸமாதானம் பெறுவோம், ஸம்சயநிவிர்த்தியை யடைவோம்.

C. W. லெட்பீடர்.

# அசோகசாஸனங்கள்.

அசோகன் (கி. மு. 269—கி. மு. 232) என்ற சக்ரவர்த்தி மகத தேசத்திலரசாண்ட மௌர்ய வம்சத்தரசன். இவர் சந்த்ர குப்தனுடைய பௌத்திரன். பிந்து ஸாரனுடைய புத்ரன். இவர் பௌத்த மதத்தை அநுசரித்த மன்னவரில் முதல்வர். இவர் காலத்தில் பௌத்தமதம் விருத்தியடைந்து உலகமெங்கும் பரவத்தொடங்கிற்று. இவர் காலத்தில், பௌத்தர் சங்கம் கூடப்பெற்றது. இதனால், இவர் ஹிந்து மதத்தில் அபிமானமற்றவர் என்றாவது, விரோதி என்றாவது சொல்லலாகாது. இவர் சாஸனங்களில், பௌத்தருக்கும், பிராஹ்மணர்க்கும் யாதொரு வித்தியாஸமுமின்றிய விஹாரங்களும், ஆச்ரமங்களும் ஸ்தாபிக்கப்பட்டது மல்லாமலும், இருமதத்தார்களும் ஒரே மாதிரியாக மரியாதையுடன் பாதுகாக்கப்பட்டுவந்தனர். மேலும், தன் மதத்தில் அதியபிமானமும், தனதைத் தவிர மற்றவையெல்லாம் பொய் என்ற தாபிப்ராயமும், அதனால் பிறர் மதத் வேஷமும்,— இவையெல்லாம் தற்காலத்திய நாகரீகங்களைச் சார்ந்தவைகளே யொழிய முற்காலங்களிலிருந்தன வென்று தோன்றவில்லை. அவனவன் வழிப்பட்டு நடப்பதே அவனவன் தர்மமென்பது முற்காலத்தியர் கொள்கை. அவர் சாஸனங்களில், சில பின்வருமாறு:—

## I

தேவப்ரியனான* ப்ரியதர்சி ராஜன் இதன் மூலமாய் விளம்பரம் செய்விக்கும் தர்மசாஸன மாவது:—"இங்கே எவ்வித ஜீவஹிம்ஸையும் செய்பக்கூடாது. ஸமாஜங்களால் பலவிதக் கெடுதிகள் ஏற்படுவதாய்த் தெரியவருவதால் எவ்விதஸமாஜங்களும் சேரக்கூடாது. ஆனால் சில நல்ல ஸமாஜங்களும் இருக்கின்றனவென்று அரசனுக்குத் தெரியவருகின்றது.

முன்பு, அரண்மனைப் பாகசாலையில் தினந்தோறும் நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் ஆகார நிமித்தம், ப்ராணிகளைக் கொல்லுவது வழக்கம். இத்தர்ம விளம்பரம் செய்யுங்காலத்தில் மூன்று ப்ராணிகள்—அதாவது இரண்டு மயிலும் ஒரு மானும் தான் கொல்லப்படுகின்றன. இனி இம்மூன்று பிராணிகளைக்கூட கொல்லக்கூடாது."

குறிப்பு:-தேவப்ரியன் 'தேவானும்ப்ரிய:' என்று சாஸனங்களில் இருக்கின்றது.

II

தேவர்களுக்கு ப்ரியனுன ப்ரியதர்சி ராஜனுடைய ராஜ்ய மெங்கும், அந்த ராஜ்யத்தை யடுத்துள்ள, சோழ, பாண்டிய, ஸத்திய புத்ர, கேரள புத்திர தேசங்களுள்பட தாம்ரபர்ணி வரையிலும், யவன ராஜனுன அந்தியகன் தேசத்திலும், அதையடுத்த தேசங்களிலும், மனிதர்க்குபயோகமாகவும், மிருகங்களுக்குபயோகமாகவும், இருவித வைத்யசாலைகள் ஸ்தாபித்திருக்கின்றார். மனிதர்க்குபயோகமானவைகளும், மிருகங்களுக்குபயோகமானவைகளுமான, மருந்து மூலிகைகள் இல்லாதவிடங்களில் அவைகள் தருவித்துப் பயிரிடப்படுகின்றன. மூலிகைகளும் பழவகைகளும் முன் இல்லாத இடங்களிலெல்லாம், இப்பொழுது புதிதாய்த் தருவித்துப் பயிரிடப்படுகின்றன.

மனிதர்க்கும் மிருகங்களுக்கும் உபயோகமாகப் பாதைகள் தோறும், கிணறுகள் வெட்டப்படுகின்றன. சாலைகள் வைக்கப்படுகின்றன.

குறிப்பு:—இந்த சாஸனத்திலிருந்து நாமறிவதாவது:—அசோகன் காலத்தில் சேர, சோழ, பாண்டியம் என்னும் மூன்று தமிழ் நாடுகளும் பிரபலமாயிருந்தன. க்ரீக் அரசரான அண்டியோகஸ் என்பவரைக் குறிப்பிடுவதால் அதுவரை இந்தியர்களுக்கு போக்குவரவுண்டு. மனித வைத்ய சாலைகளும் மிருக வைத்ய சாலைகளும் ஸ்தாபிக்கும் வழக்கம் நம் தேசத்துக்குப் புதிதல்ல. சுமார் 2,200 வருஷ காலத்துக்கு முன்னதாகவே இவைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன.

III

தேவர்களுக்கு ப்ரியனுன ப்ரியதர்சி ராஜன் சொல்லுவதாவது:—எனது அரசாட்சியின் பன்னிரண்டாவது ஆண்டில், நான் செய்யும் கட்டளையாவது, என்னைச் சார்ந்த, ராஜுகர்கள் ப்ராதேசிகள், என்ற உத்யோகஸ்தர்கள் என்ராஜ்யம் முழுமையும் ஐந்து வருஷத்துக் கொருதடவை சுற்றிவரவேண்டும். அவரவர்க் கிடப்பட்ட மற்ற கார்யங்களுடன் பின் வருமாறு தர்ம போதனையும் முக்ய கார்யமாகச் செய்யவேண்டும். அதாவது:—தாய்தந்தையரி

டத்தில் வணக்கமும், நண்பர்களிடத்தன்பும், பந்துக்கள் ப்ராஹ்மணர்கள், சிரமணர்களிடத்தில் ஈகையும் இருப்பது உத்தமம். ப்ராணிஹிம்ஸை செய்யாமை மேலான தர்மம். வேண்டியவளவு மாத்திரம் ஸம்பாதித்து மிதமாய்ச் செலவழிப்பதே நன்மை.

மேற் சொன்னவைகளின் கருத்தை, நமது அதிகாரிகள் நன்று அறியுமாறு அவர்களுக்குத் தெரிவிக்கவேண்டும்.”

‘குறிப்பு:—ப்ராஹ்மணர்கள் சிரமணரிடத்தில் ‘ஈகை’ என்புதால், அசோகசக்ரவர்த்தி எல்லாமதங்களையும் ஸமமாகவே நடத்தி வந்தார்என்றும், ‘அஹிம்ஸாபரமோதர்ம’ என்பதை நன்குணர்ந்தவர் என்றும் அறிகிறோம்.

‘அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்’ ‘மாத்ரு தேவோ பவ’, ‘பித்ரு தேவோ பவ’ என்னும் நீதி வாக்யங்கள் இச்சாஸனத்தில் கூறப்படுகின்றன.

முன் வெகு காலமாய், ப்ராணிஹத்தியும் ஜீவஹிம்ஸையும் பந்துக்கள், ப்ராஹ்மணர், சிரமணர்களிடத்தில் மரியாதையின்மையுமே அதிகரித்து வந்தன. ஆகினிமித்தம், பேரீ வாத்யமுழக்கங்களாலும், விமானக்காட்சிகள், யானைக்காட்சிகள், வாணக்காட்சிகள் முதலான பலவகைக் காட்சிகளாலும் தேவப்ரியனான ப்ரியதர்சிராஜன் செய்யும் விளம்பரங்களால் ஜனங்கள் தர்ம வழியையறிந்துவருவதால், முன் போலல்லாமல், இப்பொழுது வரவர, ப்ராணிகளைக் கொல்லாமை, ஜீவ ஹிம்ஸை செய்யாமை, பந்துக்கள் ப்ராஹ்மணர், சிரமணரிடத்தில் மரியாதை, பெற்றோரிடத்தும் பெரியோரிடத்தும் பணிவு (முதலான நற்குணங்கள்) விருத்தியடைந்து வருகின்றன.

தர்மத்தைப் பரவச் செய்யும் முயற்சியானது இதுவரை பயனடைந்து வந்திருப்பதால், இனிமேலும் அதைப் பரவச் செய்யவேண்டிய முயற்சிகள் செய்யப்படும். அரசனுடைய புத்ர, பௌத்ராதிகளும் ஸந்ததி பரம்பரையாய் தர்மபரிபாலனத்தில் ஸம்வர்த்தகல்பமுடிவு வரை வேண்டிய சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும்.

அவர்கள் தர்மத்தைப்போதிப்பதுடன், தாங்களே ஸ்திரபுத்தியுடன் தர்மத்தை யனுஷ்டித்தும் காட்டவேண்டும். ஏனென்றால் தாம் அனுஷ்டியாமல் பிறருக்குமாத்திரம் தர்மும்போதிப்பது பயனற்றதாய்ய் முடிகின்றது. ஆதலால், அபிவிருத்தியும் நலம் இருப்பதைக்குறையாமல் காப்பதும் நலம் ஆதலால் பின் வருமாறு உபதேசிக்கப்படுகின்றது.

“விருத்தி செய்ய முயற்சி செய், முடியாவிட்டாலும் உள்ளதைக் குறைய விடாதே”

இவ்வாறு தேவப்ரியனுன ப்ரியதர்சி மஹா ராஜனால், தனது அரசாட்சியின் 12-வது ஆண்டின் முடிவில் (13-வது ஆண்டில்)இவ்விளம்பரம் செய்யப்பட்டது.

குறிப்பு:—முன் சாஸனங்களில் தர்ம ப்ரஸங்கம் செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டது. இந்த சாஸனத்தில், தன் புத்ர பௌத்ராதி பரம்பரைகள் தான் ஏற்படுத்திய தர்மத்தைப் பாதுகாத்து அபிவிருத்தி செய்வதுடன், தாமே அனுஷ்டித்தும் காட்டவேண்டுமென்றும் கூறப்படுகின்றது.

## IV

தேவப்ரியனுன் ப்ரியதர்சி மஹாராஜன் சொல்லுவதாவது:—

நன்மை (செய்வது) கஷ்டம். நன்மை செய்ய முயல்பவன் துஷ்கரமான கார்யத்தைத் தான் செய்கிறன். என் புத்ர பௌத்ர பரம்பரைகள், கல்ப முடிவு வரை மேன்மேலும் நற்செய்கைகளால் தர்மத்தை நடத்தி வருவார்களாக! உள்ளதையும் கெடுக்க முயல்பவன் மஹாபாபியாவான்.

முன் வெகுகாலமாய் இந்த ராஜாங்கத்தில் தர்ம மஹா மந்திரிகள் என்ற அதிகாரிகள் இல்லை. எனது அரசாட்சியின் 13-வது ஆண்டில், அப்படிப்பட்ட மந்திரிகளை நியமித்திருக்கின்றேன்.

பாஷண்டர்கள் யாவரையும் அவர்கள் வறுதிக்குட்படுத்தி யிருக்கிறேன். தேச தர்ம பரிபாலனம் அவர்கள் ஆதீனத்துக்குட்பட்டது. தர்மத்தைப் பரவச் செய்வதும், யவன, காம்போஜ, காந்

தார, ராஷ்ட்ர, பேதணிக தேசங்களில், தர்மகர்த்தர்களுக்குவே ண்டி உதவிபுரிவது அவர்கள் முறைமை.

திக்கற்றவர்க்கும், ப்ராம்மணர்க்கும் பெற்றோரற்ற பாலர்க் கும், விருத்தர்க்கும், உதவி செய்வதும், தர்ம பரிபாலன அதிகாரி கள் அதிகச்ரமமடையாது பாது காப்பதும் அவர்கள் முறைமை.

கைதிகளையும், சரீரதண்டனையடைந்தவர்களையும் மன்னித்து அவர்கள் வேலையைக் குறைப்பதும், தான் தேடிக் காப்பாற்றவேண் டிய குழந்தைகளுள்ளவனையும், பிறர் போதனைபால் ஏமாந்து குற் றம் செய்தவனையும், கிழவனையும் விடுவிக்கவும் அவர்களுக்கு அதி காரமுண்டு.

பாடலிபுரம் முதலான பட்டணங்களில் என் ஸஹோதரர் ஸஹோதரிகள் முதலான என் பந்துக்கள் அரண்மனைகளிலும்கூட அவர்கள் அதிகாரம் செல்லும்.

தேசமெங்கும் தர்மகர்த்தர்கள் அவர்கள் அதிகாரத்துக்குட் படுவார்கள்.

இதனிமித்தம், இந்தத் தர்மசாஸனம் விளம்பரம் செய்யப்படு கின்றது. இத்தருமம் வெகுகாலம் நீடித்து நிற்க! என் ஸந்ததிக ளும் தவறாது அதைப் பரிபாலித்து வருவார்களாக!

பொது நன்மையைப் பார்க்கிலும் பெரிய கார்யம் வேறொன்று மில்லை.

நான் ஏன் இவ்வளவு ப்ரயாஸப் படவேண்டும்? ப்ரஜைகளுக்கு எனது கடமையைச் செலுத்துவதற்காகத்தான். இவ்வுலகில் அவ ர்கள் ஸந்தோஷமாய் வாழும்படி செய்வேனாகில், பரலோக சௌக்கி யத்தையவர்களே தேடிக்கொள்வார்கள்.

இவ்வாறு தர்மப்ரஸங்கம் செய்வதின் கருத்தாவது அந்தச் சாசுவதமாய் நிலை நாட்டவும் பொது நன்மையைக் காக்கும் பொரு ட்டு அத்தர்மத்தை என் புத்திர பௌத்ர பரம்பரைகள் அநுசரிக் கவும் தான். அதிகச்ரமமில்லாமல் பொது நன்மையை நிலைநாட்டு வது கடினமல்லவா?

## V

தேவப்பிரியனான ப்ரியதரிசி மஹாராஜன் சொல்லுவதாவது:—

முன் வெகுகாலமாய் (அரசன்) பொதுக்கார்யங்களை எந்நேரத்திலும் கவனிப்பதேயில்லை. அதனால் ஓர் ஏற்பாடு செய்திருக்கிறேன். நான் உண்ணும்பொழுதும், நான் அரண்மனையி லிருந்தாலும், அந்தப்புரத்தி லிருந்தாலும், தேகப்பயிற்சி செய்கையிலும் ராணுவப்பயிற்சி செய்கையிலும், உத்தியானத்தில்உலாவுகையிலும், எந்நேரமானாலும், ராஜ அதிகாரிகள் தேச சமாசாரங்களைத் தெரிவிக்கவேண்டும். எந்த இடத்திலிருந்தும் நான் அக்காரியங்களைக் கவனிப்பேன். தானமோ, யுக்தியோ நான் என்ன சொன்னபோதிலும், மந்திரிகளிடம் ஒப்புவிக்கப்படும் முக்ய ராஜ காரியங்களைப் பற்றி, ஸபையில் விவாதம் ஏற்பட்டாலும், என் அபிப்பிராயத்தை ஆக்ஷேபிக்க நேர்ந்தாலும், காலதாமஸ மின்றி, அவ்விஷயமெப்படி யிருந்தாலும், நான் எங்கேயிருந்தாலும் எனக்குத் தெரிவிக்க வேண்டும். இது எனது கட்டளை.

எவ்வளவு சிரமப்பட்டாகிலும் பொதுக்காரியங்களை நிர்வஹிக்க வேண்டுமென்பதில் எனக்கு எப்போதும் ஊக்கக் குறைவேயில்லை. ஸர்வ ஜனங்களுடைய க்ஷேமத்தையும் பாதுகாப்பதே எனது கடமை. அரசின் ஊக்கமும் விடாமுயற்சியுமே ஜனங்களுடைய க்ஷேமத்துக்கு அவசியமானவை. தேவப்பிரியனான ப்ரியதர்சி மகாராஜன் கோருவதாவது பாஷண்டர் (Heterodox) எல்லோரும் எங்கே வேண்டுமானாலும் வசிக்கலாம். அவர்களும் தன்னடக்கமும், மனச்சக்தியும் உடையவர்களா யிருக்கின்றார்கள். ஒரு தேச ஜனங்களில் அவரவர் ஆசைக்குத் தக்கவாறு உயர்ந்தோர் தாழ்ந்தோர் எனப்பற்பல தராதரங்களிருப்பது இயற்கைதான். அவரவர் சம்தம் அபிப்ராயப்படி நடந்து கொள்ளவும். ஆனால் பரோபகாரமெனும் உயர்ந்ததன்மை யில்லாவிடினும், நல்லெண்ணம், நன்றியறிவு, பர்ஸ்பர ப்ராத்ருவாத்ஸல்யம் முதலான நற்குணங்கள் (எல்லோரிடத்தும்) இருக்கவேண்டியது அவசியம்.

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர், B. A., B. L.,
வக்கீல், மதுரை.

# பரமர் வருந்தருணம்.*

அவர் வரும் நாளை எதிர் பார்த்திருப்பவர் யாவர்?

அவர் பிரஸந்நமானவுடன் அவரெதிரில் நிற்கவேண்டியவர் யாவர்?

"உலகத்தை இனிது காத்தற்பொருட்டு ஒரு பரமாசார்யர் அவதரிக்கப் போகின்றார் என்று நாம் இப்பொழுது அறிவிக்கும் வார்த்தை புதிதல்ல. தொன்றுதொட்டு வழங்கியதுதான் திரும்பவும் சொல்லப்படுகின்றது. ஒவ்வொரு மதமும் யாவரோ ஒருவர் அவதரிக்கப் போவதாயும், அவர் வார்த்தையின் மகத்துவத்தால் தான் மனிதவர்க்கத்தார் கடைத்தேறவேண்டுமென்றும் வற்புறுத்தியுள்ளது, இப்பொழுதும் வற்புறுத்துகின்றது. அடுத்த அவதாரம் கல்கியென்றும், அவ்வவதார புருஷர் வெள்ளைக் குதிரையின்மேல் ஆரோகணித்து வருவாரென்றும் இந்துமதம் அறிவிக்கின்றது. தேவதைகளுக்கும் மனிதர்களுக்கும் குருவான போதி சத்வாமைத்ரேயரின் வரவை பௌத்தமதம் கூறுகின்றது. சஓஷையாண்ட் என்ற "ரக்ஷகர்" வரவை எதிர்பார்க்க ஜோராஸ்டிரமதமும், மெஸையாவை எதிர்பார்க்க யூதமதமும், கிறிஸ்துவை எதிர்பார்க்க கிறிஸ்து மதமும் கூறுகின்றன.

மகம்மதிய மதமுங்கூட கடவுளுடைய மற்றொரு தீர்க்கதரிசியின் வரவைக் கூறுகின்றது. காலஞ்சென்றவுடன் அவரை அடக்கம் செய்வதற்காக, மெடீனாவில் மகம்மது சமாதிக்குப் பக்கத்தில் ஒரு கல்லறை தயார் செய்யப்பட்டிருக்கிறது. பெர்சியாவிலும் இன்னும் பற்பலவிடங்களிலுமுள்ள ஷப்யாஸ் என்பவர்களுக்கு கி. பி. 940-ம் வருஷத்தில் இருந்து மறைந்துபோன இமாம்மாடியைப்பற்றி நன்றாய்த் தெரியும். மதத்தின் மகிமை குன்றுங்காலத்து மனிதரைக் கடவுளிடத்தில் சேர்ப்பிப்பதற்கு ஜபல்கா என்ற குப்தமான பட்டணத்தில் மறுபடியும் வருவாரென்றவரை யெதிர் பார்க்கிறார்கள்.

---

* வேட்டைக்காரன்புதூர் T. M. குருபாதஸ்வாமியாரால் மொழிபெயர்க்கப்பட்டது.

இப்படி எல்லா மதங்களிலும் முன்பே அறிவிக்கப் பட்டிருக்கின்ற அம்மகான் வந்தால் அவரை யேற்றுக்கொள்வோர் யாவர்?

அவரை யேற்பவர்களின்னார், ஏலாதவர்களின்னார் என்று தீர்க்க தரிசனமில்லாமலே நாமே நிச்சயமாய் அறிந்து சொல்லக்கூடும்.

எப்படியெனின், ஜோராஸ்டரும் புத்தரும் கடவுளுடைய கட்டளையைப் போதித்தபோது உலகத்தார் அவர்களை நிந்தித்தகாலத்திலும், கிறிஸ்து கடவுளையடையும் வழியைக் காண்பித்தபோது ஜனங்கள் அவரைக் கொன்ற காலத்திலும், இருந்ததைவிட இப்போது, மானுட சுபாவமானது விசேஷமாக யாதொரு மாறுபாட்டையுமுடைந்ததாகக் காணப்படவில்லை.

மதஸ்தாபனம் செய்பவந்த ஆசாரிய புருஷர்களெல்லோரும், பொதுவாய் ஓர் தன்மையராய் இருக்கிறதனால் தான் அவர்கள் கற்பனைகள் சிலருக்கு அதிக பக்தி உத்ஸாஹத்தையும் வேறு சிலருக்கு அதிக வெறுப்பையும் தருகின்றன. அத்தன்மையிதுவாம்:—அவ்வக்காலங்களில் சாமான்ய அறிவின்மையால், மனிதர்கள் வஸ்துக்கள் எவ்வாறிருக்குமென்று நினைத்திருந்தார்களோ, அவ்வாறின்றி அப்பரமாசிரியர்கள் அவைகளை யுள்ளபடியறிவதேயா மென்க.

அதாவது, எதையும் அவர்கள் அதன் உண்மை நிலையில் பார்ப்பவர்கள். மேலும் அவர்கள் உருவோடு நிற்காது அவ்வுருவுள்ளிருக்கும் உத்தமனை உண்மை நிலையில் நாடி இன்னின்ன விஷயங்கள் இம்மனிதவர்க்கத்தை மேன்மையடையும்படியாக்குமென்றும் இன்னின்ன விஷயங்கள் கீழ்மையடையும்படி செய்யுமென்றும் காண்கின்றார்கள். உலகத்தார் யாது யாதைப் பிழையற்றதென்றும் பிழையென்றும் நியாயமென்றும் அநியாயமென்றும் வைத்துக் கொண்டிருக்கின்றார்களோ, அவைகளை மனிதவர்க்கத்தார் நிதானிப்பது போலல்லாமலும், லௌகிக வழக்கம் லௌகிகமர்யாதை என்ற வெளிவேஷமில்லாமலும் சீர்தூக்கி கடவுளின் பிரீதியாய் உண்மையை உள்ளபடியே உரைப்பார்கள்.

எக்காலத்திலும் உலகில் இருவகையான மனிதர்களைக் காணலாம். நிச்சயமாய்த் தாங்களே முற்று முணர்ந்தவர்களென்றிருப்

போர் ஒருவகையார். "நாம் கேள்விப்பட்டதப்படி" என்றடக்கத்து டனிருப்போர் மற்றொரு வகையார். அவர்களில் முற்கூறியவர்கள் எப்பொழுதும் வாதிகளாகவே யிருப்பார்கள். எவ்விஷயத்தையேனும் அவர்களுக்குச் சொல்லி அது அவர்கள் கொண்டிருக்கும் தீர்மானத்தைச் சற்று மாற்றுமானால், அதையவர்கள் பொய்யென்றும் முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய விஷயமல்லவென்றும் மறுத்துவிடுவார்கள். நிச்சயமாய் முற்றுமுணர்ந்துளேமென்றிருக்கும் இவர்கள் தாம் தத்துவஞான சாஸ்திரங்களிலெங்கும் படித்ததாகக் கனவிலுமறியா அரிய பெரிய விஷயங்களை மஹத்தான ஞானசாரியர் தோன்றி ஒவ்வொன்றாய் எடுத்துக் காட்டுங்காலத்து இவர்கள் அவரை யெவ்வாறேற்பார்கள்? அவர் பிரத்யக்ஷமாய்க் காட்டும் தத்துவங்களை தங்கள் தத்துவ சாஸ்திரத்தை அதியவசியமாய் மாற்றிக் கொள்ளவேண்டிய ஒவ்வொரு வழிக்கும் போதுமான பிரமாணங்கள் என்பதையறியாமல், அவர் தாமாகவே எடுத்துக்கொண்ட அதிகாரத்தின்மேல், வேறு யாதொரு ஆதாரமுமின்றிப் பேசுகிறாரென்று குற்றஞ் சாட்டுவார்கள். அவர் முன் பாலஸ்டைன் என்ற இடத்தில் சொன்ன தத்துவ போதனைக்கும் இப்பொழுது சொல்வதற்கும் வித்தியாசமிருப்பதாகச் சொல்லுவார்கள். ஆனால் பாலஸ்டைனில் அவர் ஏதாவது சொன்னாரா இல்லையா? அல்லது ஜனங்கள் தாம் அவர் சொன்னதாகச் சொல்லுகிறார்களா? என்ற விவரமும் இவர்களுக்குத் தெரியாது. பாலஸ்டைன் முதலான இடங்களில் சரியான வழிகள் இன்ன தப்பான வழிகள் இன்ன என்று அவர் சொல்லாத 999 சங்கதிகளைச் சொல்லியிருப்பதாய்ச் சொல்லி அவற்றிற் குற்றம் பிடிப்பார்கள். அவர்கள் உயிரற்ற உருவத்தைக் கட்டிக்கொண்டழுவார்கள். ஜீவன் அதிபுத்கிருஷ்டமும் விசாலமுமான வழியை நாடுதற்குரிய ரூபத்தைப் பரமகுருவானவர் கற்பிக்குங்கால் அவர்களதற்கிடங் கொடுக்கமாட்டார்கள். தாங்களே பெருமை பாராட்டிக்கொள்ளும் அவர்கள்புத்தியானது ஒளியை மறைக்கக்கூடிய பெரும் புகை போன்றிருக்கும். வாஸ்தவத்தில் நீரில் அமிழ்ந்து கிடக்கும் நேரான தடியைப்பார்த்து வளை தடியென்று மயங்கும் புத்திமான்களென்றே அவர்களைச் சொல்லவேண்டும்.

மற்றொரு பக்ஷமாக அடக்கத்துடன் "நாம் கேள்விப்பட்டது அப்படி." என்று ஏற்றுக்கொண்டிருக்குமவர்கள் அவரை அறிவதற்கு

இவர்களை விட மிகவும் தயாராயிருப்பார்களென்பதில் சந்தேகமி ல்லை. எப்பொழுது ஒருவன் உயர் நோக்கமொன்றை அறிவுறுத் தப் பெறுகிறானோ,தற்சமயமே, அதை யெய்துவதால் மனித வர்க்க த்திற்கும்மற்றுமுள்ளவர்க்கங்களுக்கும் இப்பொழுதிருப்பதைவிடப் பூரணமும் சந்தோஷமுமான வாழ்க்கைக் கனுகுணமான சீர்திரு த்தங்கள் எவ்வழிகளில் தேவை யென்றுணர்ந்து அதைச் சீக்கிரம் அநுபவித்தற்குரிய வழியொன்றையும் திட்டம் செய்து விடுவான். இத்தகைய ஒவ்வொரு மனோரதனும், சீர்திருத்தக்காரனும், தன் நினைவும், தான் ஏற்படுத்தியிருக்கும் சட்டமும், தன் சிற்றறிவை யும், அநுபவத்தையும் பொறுத்தமட்டில் தான் வாஸ்தவமேயல்லா மல், அவைகள் மாறுபடாத உண்மைகளாகவும், எல்லாவற்றிலும் சிலாக்கியமாகவும் தான் இருக்கவேண்டுமென்கிற அவசியமில்லையெ ன்று அறியக்கடவர். ஏனென்றால் நாம் என்ன முடிவு ஏற்படுத்தி க்கொண்டிருக்கிறோமோ, அதையனுசரித்தே அம்மகத்தான குரு வின் வாக்கியமுமிருந்து விட்டால் தான் சிலாக்கியம். இன்றேல்? இங்குதான் பதார்த்தங்களின் வெளி உருவத்தால் ஏமாந்து போகாமல் நம்மை நாம் ஜாக்கிரதையாய்க் காக்கவேண்டும். "நம்மு டைய தத்துவ சாஸ்திரங்கள் மேன்மையான வழியைக் கூறுகி ன்ற பிரகாரம், நாம் மேன்மையான வழியில் நடக்கிறோம்" என்று நினைத்து நல் வழியில் நடப்பவர்களைக் காட்டிலும், தத்துவ சாஸ்திர ஞானமின்றித் தாமாகவே நல் வழியில் நடப்பவர்கள் ஒரு வகையில் விசேஷித்தவர்கள் தான்.ஏனென்றால் அவர்கள் அம் மகா குருவின் தத்துவ போதனையையுடனே ஏற்று தம்முடைய தாக்கிக்கொள்வது மல்லாமல், அவர் தான் சரி, தாம் தப்பெ ன்பதை யவர் ருசுப்படுத்தட்டு மென்றெதிர் பார்க்கவு மாட்டார் கள். நீதி யென்றால் நீதி யென்ற மாத்திரத்தானேநாம் நீதி யாய் நடக்கவேண்டுமென்பது, நம்மில் இயற்கையாயமையும்படி நம் மிடமுள்ள குற்ற வுணர்ச்சிகளை நீக்கிவிடக்கூடிய உறுதியோடும் விசாலமான அஸ்திவாரத்தோடும் கூடிய சத் விசாரணை நம்மிடம் எப்பொழுது ஏற்படுகிறதோ அப்பொழுதுதான் அவர் நமக்களிக்கும் ஆத்மதாரையை களவில்லாத மனத்துடன் கிரகித்துக் கொள்ளத் தயாராயிருப்பவர்களாவோம். உண்மையில் அவர் வரவுக்குமுன் இப்

பொழுதே அவரை யார் ஏற்றுக்கொள்ளுகிறார்களோ, அவர்கள் தாம் "அவர் வருங்கால்" அவரை யேற்றுக்கொள்ளுவார்கள்.

அவர் வரவு யாவருக்கு? இடம் காலம் என்ற கட்டுப்பாட்டிற்குட்பட்ட இவ்வெளி யுலகோர்க்கு மாத்திரம் தான். சாசுவதமான உள் உலகத்தார் சிலருக்கு அவர் ஏற்கனவே வந்துவிட்டவராகிறார். கிருஷ்ணனையோ புத்தரையோ அல்லது கிறிஸ்துவையோ அன்போடு வணங்கி, அவர்கள் கைங்கரியமாக எண்ணி நற்காரியங்களைச்செய்து கொண்டு வருபவர்கள் கிருபா பூர்ணரான அம்மஹா குருவைத் தங்களுள்ளத்தில் ஏற்கனவே கண்டுகொண்டவர்களாகிறார்கள். அயலாரிடத்துள்ள குணம், குற்றம் குறியாது அன்பும் தர்ம குணமும் நிறைந்து வாழும் நிரீச்சுரவாதியும் ஏற்கனவே அம்மகானையறிந்திருக்கிறான். சாஸ்திரத்திலோ, அல்லது சித்திரத்திலோ தனக்குள்ள அன்பால் ஏற்படும் கஷ்டங்களைச் சகித்துக்கொண்டு, பொறுமையுடன் அவ்வழியிலே செல்லும் ஒவ்வொரு சாஸ்திரியும் சித்திரக்காரனும் (Scientist and Artist) அவர் வருங்கால் அவரைப் பின்பற்றுவதாகத் தன் அந்தரங்கமான இருதயத்தில் தனக்குத்தானே நிச்சயித்துக்கொண்டிருக்கிறான். மகத்தான ஆனந்தம் நிறைந்த சத்சங்கதிகளை ஏற்கனவே கேட்டுக்கொண்டிருக்கும் உத்தம மனதுடையவர்களிவர்களாதலால் அவர்வருங்கால் அவீர் சாந்தத்தை யேற்றுக்கொள்ளுவார்கள்.

உத்தம மனதுடையவர்களாய், மனோ வாக்குக் காயங்களால் செய்யும் காரியங்களில் சாந்தமுடையவர்களாய், மேன்மையான உயர்லக்ஷ்ய மொவ்வொன்றிலும் மெய்யான தி...முள்ளவர்களாய், நம் சகோதரர் சுலபமாய் தம்பாரத்தைத் தாங்கும்படி, அவர் சுமையைக்குறைக்கும் விஷயத்தில் பூரண மனதுடன் உழைக்கும் ஊக்கமுடையவர்களாய் நாம் மாத்திரம் இருப்போமேயானால் "அவர் வருங்கால்" கட்டாயமாய் அவரை அறியவும், அவருடன் சந்தோஷித்திருக்கவும், அவர் நடத்தும் வழியில் நடக்கவும் பாத்திரர்களாவோம்.

வி. ஜீனராஜதாஸர்.

---

# டோரா.

உழவன் ஆல னுடன்ஒரு பண்ணையில்
உறைந்தனர் வில்லிய மும்டோ ராவும்.
அவன்மகன் வில்லியம்; அவள்சோ தரன்மகள்.
பன்முறை அவர்களைப் பார்த்தவன் "தம்பதி
ஆக்குவேன் இவரை" யென் றடிக்கடி எண்ணுவன்.
சிறிய தந்தை சிந்தையில் நினைந்ததை
முற்றும் டோரா உற்றுணர்ந் தவளாய்
வில்லியம் மீது விருப்புக் கொண்டனள்.
எனினும் அந்த இளைஞனோ, அவளுடன்
என்றும் இல்லினில் இருந்தகா ரணத்தால்
ஓரா திருந்தனன் டோரா வினையே.
இந்தச் செய்தி இருக்க, ஓர் நாள்,
ஆலன் மகனை அழைத்து "மகனே!
காலம் கழித்துயான் கடிமணம் முடித்தேன்
எனினும், இனிநான் இறந்திடும் முன்னர்
எனது பேரன் என்னுடை மடியினில்
இருப்பதைக் காண விருப்புறு கின்றேன்
நினக்கு மணஞ்செய நினைத்திருக் கின்றேன்
ஆதலின் டோரா மீதுகண் பார் நீ.
அவளோ பார்வைக் கழகு வாய்ந்தவள்
அவள்தன் வயதுக் கதிக மாகவே
செட்டாக் குடித்தனம் செய்கின் றவளே
அவள்என் சோதரன் அருமைப் புதல்வி.
அவனும் நானும் அன்றொருக் கால் கடும்
பேச்சுப் பேசிப் பிரிந்து போயினோம்
அவன்இறந் தானோர் அந்நிய நாட்டினில்
அவன்பொருட் டவன்மக ளாம்டோ ராவை
வளர்த்தேன்; அவளைநின் மனைவியாக் கொள்ளுதி.

---

* இது டென்னிஸன் பிரபு இயற்றிய "Dora" என்பதன் தமிழ்மொழி பெயர்ப்பு.

ஏனெனில் இம்மணத் தினைப்பல் லாண்டா
அல்லும் பகலு மாவிரும் பியுளேன்.
என்று கூறினன். எனினும், வில்லியம்
சுருக்க மாவிடை சொற்றனன். "முடியா
தென்னல் டோரா வினைமணந் திடவே.
என்னுயிர் போயினும் யான்டோ ராவை
மணமுடித் திடவே மாட்டேன்" என்றனன்.
முதியோன் கோபம் மூண்டவ னாகி
மடக்கிய கையுடன் "மாட்டாய் பயலே!
இந்த விதம்சொல வந்ததா துணிவு!
என்கா லத்தில் எல்லாம் தந்தை
இட்டது சட்டமா இருந்ததிப் போதும்
என்சொலும் அவ்வா றிருத்தல் வேண்டும்
சொல்வது தெரிந்ததா வில்லியம்? இதனைப்
பற்றியோ சித்துப் பார்த்திட உனக்குத்
தவணை ஓர் மாதம் தந்துளேன். அதற்குள்
எனது விருப்பிற் கிணங்க ஓர்விடை
யான்பெற வேண்டும்: இல்லா விடிலோ,
என்னைப் படைத்த ஈசன்மேல் ஆணை
இங்கிருந் தோட்டம் எடுக்கவேண் டியவனே
இதற்குப் பின்னர் என்றும்என் வீட்டு
வாயிலில் நினது சாயையும் வீழ்ந்திடக்
கூடாது" என்னக் கூறினன். கூறலும்,
வெறிபிடித் தவனும் விடையளித் ததட்டைக்
கடித்துக் கொண்டவ் விடத்தி னின்றும்
அகன்றனன் வில்லியம். அதன்பின் அவனை
பார்க்கப் பார்க்கப் பகைத்தனன் மேன்மேல்
அதுமுதல் கடுமையா அவளிடம் நடந்தான்
ஆயினும் பொறுமை யாகவே டோரா
அவற்றைச் சகித்தனள். அதற்குப் பின்னர்
அவன்ஓர் மாதம் ஆவதற் குள்ளே
தனது தந்தை மனையகம் நீங்கி

விளைகளம் தன்னில் வேலைக் கமர்ந்து
ஆசை பாதியும் ஆத்திரம் பாதியும்
கொண்டவ னுகிஒர் கூலிக் கீரானின்
மக்ளாம் மேரி மாரிஸ னின்பால்
நயமுற நடந்துதன் வயமுறச் செய்துபின்
அவளை மணந்தனன். அந்தச் சமயம்
மண மணி ஓசை கணீரென ஒலிக்கையில்
ஆலன் தன்னுடை அண்ணன் மகளைக்
கூவி அருமைக் குழந்தாய்! நின்பால்
வாஞ்சை அதிகம் வைத்திருக் கின்றேன்
என்றாலும், நீ என்மக னாக
இருந்த பயலுடன் எதும் பேசினை
யாயினும், அல்லது அவன்தன் மனைவியென்
றழைப்பவ ளுடன்உரை யாடினை யாயினும்
என்வீ டுன்வீ டினியா காது. யான்
இட்டது சட்டம்" என்று கூறினன்.
ஸாது, டோரா: ஆதலின் வாக்குத்
தத்தம் செய்தனள். தன்மனத் திற்குள்
"ஆகாக் காரியம் ஆகும் இதுவெலாம்
என்சிற் றப்பன தெண்ணம் மாறிடும்
என்றவள் எண்ணினள். சென்றன பன்னாள்
வில்லியத் திற்கொரு செல்வன் தோன்றினன்
உடனே இடுக்கண்வந் துற்ற தவற்கு
நொந்த மனத்துடன் தந்தையின் வாசல்
வழியே சென்று வந்தனன் நாடொறும்
வந்தும் அவனது தந்தையோ அவனுக்
கெவ்வித உதவியும் இயற்றினன் இல்லை
ஆனால் டோரா வோரா ளாகும்
தன்னால் மீக்கத் தக்க சொற்பப்
பொருளைச் சேர்த்ததை ஒருவரும் அறியா
வண்ணம் அனுப்பி வந்தனள். அவர்களும்
அனுப்பியோர் யாவரென் றறிந்திலர் இல்லை

கடைசியில் வில்லியம் காய்ச்சல் கண்டு
கதிர்அறு வடைசெயும் காலத் திறந்தனன்
இறக்கவே, மேரியின் இருப்பிடம் டோரா
சென்றனள். மேரிதன் செல்வனைப் பார்த்து
கண்ணீர் வடித்துட் கார்ந்துகொண் டிருந்தனள்
டோரா வின்மேல் பூரா அவட்கு
நல்ல எண்ணமே இல்லை. டோரா
வந்ததும் சிறிய தந்தையின் கட்டளைக்
இதுவரை கீழ்ப்படிந் திருந்திட் டேன்யான்
நானோர் பாவி. ஏனெனில், என்றால்
அன்றோ அக்தோ ஆதி முதலில்
வில்லியத் திற்கிப் பொல்லாங் குற்றது.
எனினும் மேரி இறந்தவன் பொருட்டும்
காத லுடனவன் கடிமணம் புரிந்த
அரிவையாம் நின்பொருட் டாகவும் இந்த
அநாதைக் குழந்தைக் காகவும் நின்பால்
வந்திருக் கின்றேன் இந்தஐந் தாண்டுக
ளாகஇத் துணைநிறை அறுவடை இருந்த
தில்லை என்பதை இனிதறி வாயே!
சிறுவனை எடுத்துச் செல்லுகின் றேன்இக்
குழந்தையைக் கோதுமைக் குவிய லுக் கிடையில்
சிற்றப் பன்கண் ணுற்றிட வைப்பேன்
அவனுள்ளம் பூரண அறுவடை நிமித்தம்
மகிழ்கையி லேஇம் மதலையை ஒருக்கால்
காணவும் கூடும் கண்டதும் இறந்தவன்
பொருட்டவற் கின்னலம் புரிதலும் கூடும்
என்றிவை கூறினள் பின்புடோ ராஅக்
குழந்தையை எடுத்துக் கொண்டு கோதுமைக்
கிடையே சென்றுங் கிருந்த வித்திடப்
பட்டி ராதலர் கிட்டிலுட் கார்ந்தனள்
கசகசா பலஅதன் மிசைவளர்ந் திருந்தன
தொலையில் அந்தப் புலமதில் உழவன்.

நண்ணியும் அவளைக் கண்ணுற வில்லை
அவன் ஆட் களினும் எவனுமே டோரா
காண்முளை யோடும் காத்திருக் கின்ற
செய்தியை அவனிடம் செப்பத் துணிந்திலர்
டோரா எழுந்து நேரா அவனிடம்
போயே இருப்பள் ஆயினும் பயத்தால்
அங்ஙனம் செய்ய அவள்மனம் எழவிலை
கதிர்அறுப் பவர்கள் கதிர்அறுத் தார்கள்
வெயிலோன் குடதிசை வீழ்ந்தனன் வீழவும்
இருநில மெங்கும் இருளாய் இருந்தது
மறுநாட் காலை யுறஅவள் எழுந்து
குழந்தையை மீண்டும் கொண்டத் திட்டினில்
வந்துட் கார்ந்தனள் அந்தத் திட்டைச்
சுற்றிலும் முளைத்த பற்பல பூக்களைக்
கொண்டோர் மாலை கோத்தனள் தனது
சிறிய தந்தையச் சிறுவனைப் பார்த்த
உடனே அவன்மன முவக்கும்படி அவன்
தொப்பியைச் சுற்றிலும் சூட்டினள் அதனை
உழவன் கழனியில் வந்தும் அவளைக்
கண்டான் வேலையிற் கண்ணா இருந்த
ஆட்களி னின்றும் அவளிடம் வந்தனன்
"எங்கே நேற்றைக் கெல்லாம் இருந்தனை?
ஈதுயார் குழந்தை? யாதுநீ செய்துகொண்
டிங்கிருக் கின்றனை?" என்னக் கேட்டனன்
கேட்கவும் பூமியை நோக்கிய கண்ணுடன்
வில்லியத் தினது செல்வன் இவன்என
மெல்லிய குரலுடன் சொல்லினள் டோரா
"கூடா தென்னயான் கூறிட வில்லையா?
இல்லையா? டோரா!" என்றனன் ஆலன்
"இட்டப் படிக் கெனை ஏதும் செய்க
ஆயினும் இந்தச் சேயினைப் பெறுக
இறந்தவன் பொருட்டவற் கின்னலம் புரிக"

என்ன டோரா இயம்பினள் மீண்டும்
இயம்பலும், "தெரியும். இன்னது நீயும்
அங்கிருக் கின்றஅந் நங்கையும் கூடிச்
செய்த சூழ்ச்சிஎன் செய்கடன் தன்னையான்
கற்கவேண் டுங்கொல்? மற்றதும் நின்பால்?
என்மொழி சட்டம் என்பதை அறிந்தும்
அஞ்சா தலட்சியம் செய்தனை யன்றோ?
நல்லது; குழந்தையை நானே கொள்கிறேன்
இவ்விடத் திருந்துநீ ஏகுக இன்னே.
எனது முகத்தில் இனிவிழி யாதே"
என்றனன் ஆலன். இங்ஙனம் கூறிக்
கொண்டே திமிறிக் கொண்டும் இரைந்தும்
கூவிய குழந்தையைக் கொண்டனன். அம்மலர்
மாலை டோராக் காலில் வீழ்ந்தது
தன்கர மேல்தலை சாய்த்துப் போயினள்
பையனின் அழுகுரல் பண்ணைநின் றவட்கு
வரவரத் தொலையி னின்றும் வந்தது
அவள்தான் ஆதியில் அவ்விடம் வந்த
நாளையும் பின்னர் நடந்த யாவையும்
நினைந்து தன்தலை குனிந்துநின் றனளே.
மண்டி யிட்டவள் மறைவா அழுதனள்
கதிர்அறுப் பவர்கள் கதிர் அறுத் தார்கள்.
வெயிலோன் குடதிசை வீழ்ந்தனன். வீழலும்
இருநில மெங்கும் இருளாய் இருந்தது
டோரா பின்பு மேரியின் வீடு
சென்றதன் வாயிலில் நின்றனள். டோரா
இடத்திற் குழந்தை இல்லா திருக்கக்
கண்டனள் மேரிவாய் விண்டனள் தனது
கைம்மையில் அருளிய கடவுளைத் துதித்தனள்
துதித்தலும் டோரா சொற்றனள்; "எனது
சிறிய தந்தை சிறுவனைக் கொண்டனன்
ஆனால் மேரி! யான்இனி நின்னுடன்

உறைந்து வேலைசெய் துய்பவள் ஆயினேன்
எனை இனிக் காண்பதே இலைஎன் றனன்'' என
''என்பொருட் டாகநீ துன்புறல் கூடவே
கூடா தன்றியும் குழந்தையை அவன்கொளல்
ஒண்ணா தெனஇன் றெண்ணுகின் றேன்யான்
அதுகல் நெஞ்சின னாகவும் தாயை
அவமதித் திடவும் அவன்கற் பிப்பனால்
ஆன படியி னாலே நீயும்
யானும் போவோம். எனது மைந்தனைப்
பெற்றே வீட்டிற் குற்றிடு வேன்யான்.
மீண்டும் நினைக்கொள வேண்டுவன் அவனை
திரும்பவும் நினைக்கொள விரும்பில னாயின்
நீயும் நானு, மேஒரு வீட்டில்
வசித்து வில்லியம் சிசுக்கு நம்மைப்
பாலித் திடுகிற பருவம் வரும்வரை
பாடுபட் டுழைத்ததைப் பாலித் திடுவோம்.
என்றனள் மேரி. என்றலும் அந்த
அரிவையர் இருவரும் ஒருவரை யொருவர்
இன்பொடு முத்த மிட்டுக் .கொண்டுபின்
புறப்பட் டந்தப் புலம்போய்ச் சேர்ந்தனர்
வாயில் தாழிடா வண்ணமா இருந்தது
பார்த்தனர் எட்டி பையன் பாட்டனின்
இருதொடைக் கிடையிலும் இருக்கக் கண்டனர்
கைகளால் அவனைக் கட்டி அணைத்தவன்
பேரில் மிக்க பிரியம் காட்டி
கைகள் கன்னங் களிலே தட்டினன்
ஆலன் கைக்கெடி யாரத் திருந்து
தொங்கிக் கொண்டங் கங்கியில் மின்னிய
பொன்முத் திரையினைத் தன்கை யினிற்கொள
நீட்டி மிழற்றி நின்றனன் பையன்
இப்பொழு தவர்களவ் இல்லினுட் புகுந்தனர்
ஆயினும் சேய்தன் தாயினைக் கண்டதும்

அவள்பாற் செலஅழ ஆரம் பித்தது
ஆதலின் கிழே அதைச்செல விடுத்தனன்
"மாமா!—தம்மைத் தாமவ் விதமா
அழைத்திட நீர் எமக் கனுமதி தருவிரேல்
என்பொருட் டேதுமே இரக்கயான் வந்திலேன்
வில்லியம் அல்லதிச் செல்வனின் பொருட்டும்
இரங்கிட வந்திலேன் யான்டோ ராவின்
பொருட்டே இவ்விடம் போந்தனன். ஐய!
அவளை மீண்டும் அங்கி கரிமின்.
நும்பால் மிக்க அன்பார்ந் தவள்அவள்
எந்தாய்! இறக்கையில் எல்லா ரிடத்தும்
எப்பிணக் கின்றியும் இறந்தனன் வில்லியம்
அவன்மன நிலையையான் அறிந்திடு வண்ணம்
அவனையே கேட்டேன் அறைந்திட் டானவன்
எனைமணந் ததன்பொருட் டென்றைக் காயினும்
அவன்மனத் துயரம் அடைந்ததே இலைஎன
இருந்தேன் பொறையுள இல்லா ளாய்நான்
ஆயினும் ஐயதன் ஐயரின் மொழியை
அவ்வித மாக அலட்சியம் செய்தது.
தவறே யென்ன அவனே மொழிந்தனன்
"இறைவன் எந்தைக் கின்னருள் புரிக
இனிமேல் என்றைக் கேனும் அவர் என்,
அருந்துயர் அனைத்தையும் அறியா ராகுக"
என்றிவை கூறித் தன்முகம் திருப்பவும்
சீவன் பிரிந்து சென்றது அந்தோ!
அபாக்கிய முள்ளவள் ஆயி னேனே
இவ்வள வெல்லாம் ஏனோ? எனது
தனயனை என்பால் தருமின் எனெனில்
அவனைக் கன்மன னாகச் செய்வீர்
தந்தையின் ஞாபகந் தனைஅலட் சியம்செய
அவன்கற் றிடுவா னல்லோ ராவை
[illegible] ஏற்றிட வேண்டுகின் றேனுமை

யாவும் முன்போ லேயிருந் திடுகென
மேரி இபம்பலும், டோசா மேரியின்
மருங்கே தன்முகம் மறைந்திட நின்றனர்
அன்றயெலாம் நிசப்த மாக இருந்தது
இருந்தாற் போல இருந்தக் கிழவன்
பொருமிப் பொருமிப் புலம்ப லாயினன்
"குற்றம் எனதே குற்றம் எனதே
என்றன் மகனைக் கொன்றவன் யானே
கொன்றேன் ஆயினும் நன்றே அவன்பால்
அன்புவைத் திருந்தேன் அருமைப் புதல்வ!
ஈசன் என்பிழை யினைப்பொறுத் தருள்க
குற்றச் சாட்டிற் குற்றவன் யானே
குழந்தைகாள் முத்தம் கொடுமின் எனக்கு" என்
றழுதனன். உடனே அவர்கள் அவனது
கழுத்தை இறுகக் கட்டிக் கொண்டு
அவற்கு முத்தம் அளித்தனர் பன்முறை
பச்சாத் தாபப் பட்டனன் முற்றும்
மாறிய அன்பெலாம் நூறு மடங்காத்
திரும்ப ஊற்றது சிந்தையில் வில்லியம்
தனைநினைத் தவனது தநயனை நோக்கி
விம்மி அழுதனன் மும்மணி நேரம்
இதற்குப் பின்னர் இந்த நால்வரும்
ஓரகத் தேயே உறைந்தனர் ஒருங்கே
ஆண்டுகள் அநேகம் ஆனதும் மேரி
மற்றும் ஒருவனை மணமுடித் திட்டாள்
ஆயினும் டோரா வேயிறந் திடும்வரை
கன்னியாக் காலம் கழித்துவந் தனளே.

பண்டித ம. கோபாலகிருஷ்ணையர்,

மதுரைமாணவர் செந்தமிழ்ச் சங்கத் தலைவர்.

# சிறுவர்க்குரிய விஷயம்.

அன்புள்ள ஸ்வர்ணமணிகளே!

சென்ற மாசம் உங்களுக்கு எல்லாப் பிராணிகளிடத்திலும் எவ்வித அன்பு இருக்கவேண்டு மென்று சொன்னேன். நம்மிடம் இருக்கும், அவ்வன்பை எத்தனை விதமாகப் பிறருக்குக் காட்டலாம்? மூன்று விதங்கள் உண்டு. அவை, அடியில் வருமாறு:—

(1) பிறரைப் பற்றி அன்பான எண்ணங்களை மனத்தில் கொள்வதனாலும்,

(2) பிறருடன் அன்பான வார்த்தைகளைப் பேசுவதனாலும்,

(3) பிறருக்கு நல்ல அன்பான காரியங்களைச் செய்வதனாலும்,

ஆக, மூன்று விதங்களாக பிறருக்கு நம்முடைய அன்பை வெளியிடலாம். சிலர், முதல் இரண்டு வழிகளில், அன்புள்ளவர்களாயிருந்தாலும் மூன்றாவது வழியில் பழகாதவர்களாயிருக்கிறார்கள். இது பிரயோஜனமில்லை, எப்படியென்றால், குடத்திற்குள் வைத்திருக்கும் ஒரு விளக்கிற்கும், ஸமுத்திரக் கரையிலுள்ள விளக்குத் தூணில் பிரகாசிக்கும் தீபத்திற்கும் உள்ள வித்தியாஸத்தைக் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். குடத்திற்குள் இருக்கும் விளக்கு பிறருக்குப் பிரயோஜனப்படுகின்றதில்லை. அதன் வெளிச்சம் விஸ்தாரமாய்ப் பிரகாசிக்கின்றதேயில்லை. விளக்குத் தூணிற் பிரகாசிக்கும் தீபமோ எத்தனையோ மைல்களுக்கப்பால் சமுத்திரத்தில் காற்றினாலும், அலைகளினாலும் மோதப்பட்டு மிதந்து வரும் கப்பல்களுக்கு வழிகாட்டுவதனால் மிகுந்த பிரயோஜனத்தைக் கொடுக்கின்றது. அதே மாதிரி நாம் மனதினாலும், வாக்கினாலும் மட்டும் அன்புள்ளவர்களாய், காரியத்தில் அன்பில்லாமற் போனால், அதாவது, பிறருக்கு உபகாரம் செய்யாமற் போனால், நாம் குடத்திற்குள் இருக்கும் விளக்குக்குச் சமானம். அநேகர் தம்முடைய சொந்தக் கடமைகளையே சரிவரச் செய்யாமலிருக்கின்றார்கள், சோம்பலாளிகளாயிருக்கின்றார்கள். அவர்கள், உதவி செய்வதற்கு, அதாவது அன்பான காரியங்களைச் செய்வதற்கு எத்தனையோ சந்தர்ப்பங்கள் நேர்ந்தாலும், அவைகளைத் தம் சோம்பேறித் தனத்தால், தவறவிடுகிறார்கள். ஒரு உதாரணம் எடுத்துக்கொள்வோம். ஒருவர் உன்

னைக் கொஞ்சம் தாகத்திற்குத் தண்ணீர் கொண்டுவரும்படி கேட்கிறார் என்று வைத்துக்கொள்வோம். நீ அப்போது உன் சோம்பலுக்கிடங்கொடுப்பாயானால் உதவி செய்ய முடியாது. இன்னும் சிலர் பிறர்க்கு உதவி செய்ய வெட்கப்படுகிறார்கள். உதாரணமாக வயது சென்றவர்கள் அல்லது மெலிந்தவர்கள் ஒரு சுமையைக் கொஞ்சதூரம் எடுத்துவரச் சொன்னால், "மற்றவர்கள் நம்மை அலட்சியமாய் நினைத்து விட்டால் என்ன செய்வது!" என்று சிலர் எண்ணி உதவியை மறுத்து விடுகிறார்கள். இவ்விதமான குறைகளைச் சிறுவர்களிடத்தினின்று நீக்கி பரோபகாரிகளாக்குவதற்கே இச்சங்கம் ஏற்பட்டிருக்கிறது. நீங்கள் இப்போதே பரோபகாரிகளா யில்லாவிட்டால், பிறகு வயது வந்தபிற்பாடு நம் தேச நன்மைக்கு நீங்கள் உழைக்க முடியாது. "ஸ்வர்ணமணிமாலையைப்" போலவே இன்னொரு சங்கம் சிறுவர்களைப் பழக்குவதற்கென்றே ஏற்பட்டுள்ளது. அதைப்பற்றிய விவரங்களைக் கீழே எழுதியுள்ளேன். இந்த உலகம் முழுமைக்குமே மிகுந்த நன்மை யுண்டாக்குவதற்காக ஒரு மஹான் வருவார் என்று வைத்துக்கொள்வோம். மஹான் என்றால் மிகுந்த அன்பு உள்ளவர் என்று முன் ஒரு கடிதத்தில் உங்களுக்கெழுதியிருக்கிறேன். அவர் உலக நன்மைக்காக இடக்கூடிய வேலைகளைச் சரிவரச் செய்வதற்கு, நீங்கள் சோம்பலில்லாத பரோபகாரிகளாயில்லாவிட்டால், எவ்விதம் முடியும்? நாங்கள் சிறுவர்களாயிருந்த போது, "சிறுபிள்ளைகளைப் பரோபகாரிகளாக்குவதற்கென்று" ஸ்வர்ணமணிமாலை போன்ற சங்கங்கள் ஏற்படவில்லை. எங்களுக்கு ஏற்படாத சௌகரியங்களும் சந்தர்ப்பங்களும் இப்போது உங்களுக்கேற்பட்டிருக்கின்றன. இவைகளை நீங்கள் கவனிக்காமல், அலக்ஷியமாய் இருப்பீர்களானால், குற்றம் உங்களுடையதாகும். ஆகையால், உங்களுக்குக் கொடுக்கப்படும் துண்டுப் பத்திரிகைகளைப் பலதரம் வாசித்து, மனத்தில் வைத்துக்கொண்டு, உங்கள் காரியங்களையும், நடத்தையையும், அதற்கேற்றபடி திருத்திக் கொள்ளவேண்டும். அப்போதுதான் நீங்கள் உத்தமமான மாணாக்கர்கள் என்று அழைக்கப் படுவீர்கள். இதன் கீழ் "நக்ஷத்திர தூதர்கள்" என்ற சங்கத்தைப் பற்றி எழுதியுள்ளேன். விருப்பமுள்ள பிள்ளைகள், விண்ணப்பம் தயார் செய்து, அரையணா ஸ்டாம்புடன், "சென்னை அடையாறு, உதய திசை நக்ஷத்திரஸங்கக் காரியதரிசியவர்களுக்கு" என்ற விலாஸத்திற்கு தபால் மூலமாய் அனுப்புவார்களேயானால், மறுதபாலில், ஸர்டிபிக்கேட் ஒன்று கிடைக்கும்.

## "நக்ஷத்திர தூதர்களின் சங்கம்"

இச்சங்கம் "உதயதிசை நக்ஷத்திர ஸங்கத்தின்" ஒரு பிரிவாகும். இது சிறுவர், சிறுமிகளுக்கென்றே ஏற்பட்டுள்ளது. இதன் உத்தியோகஸ்தர்கள் எல்லோரும் 21-வயதுக்குட்பட்டவர்களே. இதன் மெம்பர்களும் எல்லோரும், இவ்வயதுக்குட் பட்டவர்கள் தான். இது 1913-வருஷத்தில் ஏற்படுத்தப்பட்டது. பிறருக்கு உபகாரம் செய்யவேண்டுமென்ற புத்தியுடைய சிறு பிள்ளைகள் எல்லோரும் இச்சங்கத்திற் சேரலாம். இச்சங்கத்தார் அணிந்துகொள்ளும்படியான ஆபரணம், ஒன்று உண்டு. அதாவது "உதயதிசை நக்ஷத்திர ஸங்கத்தார்" வெள்ளியினால் செய்யப்பட்ட நக்ஷத்திரத்தை யணிந்துகொள்வது போல, இந்தச் சங்கத்தைச் சேர்ந்த சிறு பிள்ளைகள் வெள்ளியினால் செய்யப்பட்ட முக்கோணமொன்றை யணிந்துகொள்வார்கள். அம்முக்கோணத்தின் நடுவில் S என்ற எழுத்தும் வெள்ளியினால் அமைக்கப்பட்டிருக்கும். அதன் விலை ரூ. 1—10—0.

### நக்ஷத்திர தூதர்களின் கடமை.

1. ஒவ்வொரு மெம்பரும், "ஒரு நாளையாவது பரோபகாரச் செயல் ஒன்றாவது செய்யாமல் கழிக்கமாட்டேன்" என்று தீர்மானித்து, அதன்படியே பாய்ஸ்கௌட் ஸங்கத்தாரைப்போல் தவறாமல் நடக்கவேண்டும்.

2. ஒவ்வொருவரும், ஒவ்வொரு நாளும் தன்னினும் ஏழைப் பிள்ளையொன்றுக்கு உதவிசெய்து, அதை சந்தோஷிப்பிக்க வேண்டும். அப்படி உதவி செய்வதானது, இனி அவதரிக்கப் போகும் லோககுருவின் காரியம் என்று நினைக்கவேண்டும். அம்மாதிரி காரியங்களுக்கு அவருடைய அருளை மேன்மேலும் பிரார்த்திக்க வேண்டும்.

3. எந்த உயிர்ப் பிராணியையும் அன்பாகவும் ஆதரவாகவும் நடத்தவேண்டும். பிறர் யாராவது பிராணிகளைத் தொந்தரவு செய்வதைப் பார்த்தால், உடனே அவர்கள் அவ்விதம் செய்யாதபடி தடுக்கவேண்டும். அவர்கள் அப்படிச் செய்வது நியாயமல்லவென்று விநயமாய்ச் சொல்லவேண்டும்.

4. நக்ஷத்திரத்தைப்பற்றி மநத்தில் எப்போதும் ஞாபகம்வைத்துக்கொண்டு, அதன்பெருமைக்குக் குறைவான எந்தக்காரியத்தையும் செய்யலாகாது. நக்ஷத்ரத்தின் பெருமைக்குக் குறைவான எந்த வார்த்தையையும் சொல்லலாகாது.

5. இதன் மெம்பர்கள் ஒவ்வொருவரும் பரமர் வருங்காலத் தில்லூழியத்திற்குத் தகுதியுள்ளவர்களா யிருக்கும்படி, இப்போது முதலே தெளிவாயும், வற்புறுத்தியும், குற்றமின்றியும் பேசவும் எழுதவும், பழகவேண்டும்.

வஸந்தாநந்தர்.

474
R01A-1058
1204

## நக்ஷத்திர தூதர்களின் சங்க விண்ணப்பம்.

ஜகத்குருவின் வருகைக்கு முன்னோடியாயிருந்து, அவர் வரும் வழியை ஆயத்தம் செய்வேன். அதன் பொருட்டு நக்ஷத்திர தூதர்களின் சங்கத்தில் சேர விரும்புகிறேன்.

பெயர் ______________________

விலாசம் ______________________

______________________

______________________

______________________ தேதி ______________

______________________

## நக்ஷத்திர தூதர்களின் சங்க விண்ணப்பம்.

ஜகத்குருவின் வருகைக்கு முன்னோடியாயிருந்து, அவர் வரும் வழியை ஆயத்தம் செய்வேன். அதன் பொருட்டு நக்ஷத்திர தூதர்களின் சங்கத்தில் சேர விரும்புகிறேன்.

பெயர் ______________________

விலாசம் ______________________

______________________

______________________

______________________ தேதி ______________

______________________

* இந்த பாரம் அடையாறு உதயதிசை நக்ஷத்திர சங்க ஆபீஸால் பெற்றுக் கொள்ளப்பட்டது.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

**யுத்தத்தில் இந்தியவீரர்களின் பிரதாபம்:**—ரணகளத்தில் மஹா சௌரியத்துடன் யுத்தம்செய்து கீர்த்தி பெற்ற போர்வீரர்களுக்கு அறிகுறியாக ஆங்கிலேயர்களுக்குள் படிப்படியாய் பலவிதமான மரியாதைகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவைகளுள் "விக்டோரியா கிராஸ்" (Victoria Cross) என்பது வெகு கௌரவமான மரியாதை. அது இதுவரை இந்தியர்களுக்குக் கொடுத்ததில்லை. நம்முடைய சக்கரவர்த்தியவர்கள் பட்டாபிஷேகத்திற்காக டில்லிக்கு இரண்டு வருஷங்களுக்கு முன் வந்திருந்தபோது, இந்தியர்களும் யுத்தத்தில் உயர்ந்த திறமையைக் காட்டுவார்களே யானால், இந்தியர் ஆங்கிலேயர் என்ற வித்தியாசம் பாராட்டாமல் அவர்களுக்கும் அந்த மரியாதையை யளிப்பதாகச் சொன்னார்கள். இப்போது நடக்கிற ஐரோப்பிய யுத்தத்தில், இதுவரை **அவில்தார் கங்காஸிங்த, நாயக்தர்வான் சிங்த, சிப்பாய் குடாடாட்கான் ஆக** நம்முடைய இந்திய ஸகோதரர்களில் மூன்று பெயர்களுடைய வீரியத்தை யாவரும் மெச்சி அவர்களுக்கு அந்த உன்னதமான மரியாதையை அளித்திருக்கிறார்கள். அதற்கு ஏற்பட்ட ஒரு அடையாளம் வெண்கலத்தால் செய்யப்பட்டது. அது 4½ அணாதான் விலையுள்ளது. ஆனால் அந்த அடையாளத்தை சக்கிரவர்த்தியவர்கள் நேரே தன்னுடைய கைகளால் அந்தத் தீரனுடைய மார்பில் அணிவார்கள். அதுவுமல்லாமல் அவர்களுடைய ஜீவதசை பரியந்தம் வருஷம் ஒன்றுக்கு 150 ரூபாய்க்குக் குறையாமல், 750 ரூபாய்க்கு அதிகப்படாமல் (annuity) யும் கொடுக்கிறார்களாம். அந்தக் கௌரவத்திற்கு ஆசைப்பட்டுப் பெரிய சேனாதிபதிகளெல்லாம் உயிரை விடுகிறார்கள். இதுவரை இந்தியர்களுக்கு அவகாசம் இல்லாமலிருந்தது. க்ஷத்திரிய நாடாகிய நம்முடைய இந்தியாவில் இனி அநேக வீரர்கள் அந்த மரியாதையைப் பெறுவார்களென்பது நிச்சயம்.

---

**அலகாபாத் காயஸ்த பாடசாலை:**—மீரட் (Meerut) நகரத்திலுள்ள Upper India Bank என்பது சென்ற வருஷத்தில் உலைந்துவிட்டது. காயஸ்த ஜாதியாரால் அலஹபாத் நகரத்தில் ஸ்தாபிக்கப் பெற்று நடத்தப்பட்டு வருகிற காயஸ்த பாடசாலை என்னும் ஸர்வகலாசாலையின் மூலதானம் அந்த பாங்கில் போடப்பட்டிருந்தது. அதிலிருந்து வருஷம் ஒன்றுக்கு சுமார் ரூ. 3600 வரும்படி கிடைத்துக்கொண்டு வந்தது. அந்தபாங்கி உலைந்துபோகவே 'ஷெ பாடசாலைக்குப் பெரிய நஷ்டம் நேரிட்டது. அந்த ஸர்வகலாசாலைக்குத் தலைமை உபாத்தியாயராக நியமிக்கப்பட்டிருக்கிற ஸ்ரீமான் ஸஞ்சீவிராயரவர்கள் கல்வியிற் சிறந்தவர்கள். இங்கிலாந்தில் போய்ப் படித்துத் தேறியவர்கள். பிரஹ்மஞானசபையில் பரமசிரத்தையுள்ள மெம்பர்களிலொருவர். அவர் தன்னுடைய ஸ்வயநயத்தைப் பாராட்டாமல் தன்னுடைய கையிலிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ. 50வீதம் கொடுத்துவருவதாக வாக்களித்து அந்தப்படி கொடுத்து வருகிறாராம். அதனால் அவருக்குக் கீழ்ப்பட்ட மற்ற உபாத்தியாயர்களும் மா[illegible]க்கத்